Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 20    செவ்வாய்க்கிழமை    ஓசை 74

Nallur Branch Library (03 5 94)

## எயிட்ஸ் தடுப்பூசி தயாரிப்பில் போதிய விஞ்ஞான வளர்ச்சி இல்லை

எச். ஐ. வி வைரசுக்கான தடுப்பூசியை விருத்தி செய்வதில் சில இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது. இந்த ஆட்கொல்லி நோயை ஒழிப்பதற்காக தடுப்பூசியை விருத்தி செய்வதில் உள்ள தடைகளை அகற்ற உலக சுகாதார ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட சகலரதும் ஒத்துழைப்பை கோரியிருக்கிறது எயிட்ஸ் நோய் பற்றிய உலக திட்டத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்பாளர் டாக்டர் பீற்றர் கிளாற் எச். ஐ. வி தடுப்பூசியை விருத்தி செய்வதில் இருக்கின்ற தடைகள் பற்றி எச்சரிக்கை செய்துள்ளார்- அவர் பிரான்சில் எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது (6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் இருந்து அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துக!

## இன்று படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஐந்து மாணவர் பலி

(கொழும்பு)

அருங்கல என்னும் இடத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வாக [6ஆம் பக்கம் பார்க்க]

## அகதிளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் இந்திய அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்நாடு அகதிமுகாம்களில் தங்கியுள்ள வடக்கு—கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு மீள அனுப்பிவைப்பதை நிறுத்த வேண்டும் என்று கோரி அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம் இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளது: வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இன்னமும் சுமுகநிலைமை தோன்றவில்லை என்பதனாலேயே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

சுமார் ஒரு லட்சம் மக்கள் தமிழ்நாட்டுஅகதிமுகாம்களில் தங்கியிருக்கின்றார்கள் என்பதும் சுமார் 30 ஆயிரம் மக்கள் கப்பல் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களை வந்தடைந்துள்ளார்கள் என்பதும் தெரிந்ததே.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமுகநிலை நிலவவில்லை. இங்கு தொடர்ந்து யுத்தம் நடைபெறுகிறது; இதனால் திரும்பிவரும் அகதி மக்கள் மீளத் தங்கும் போது பாதிக்கப்பட நேரிடுகிறது. இது தவிர்க்க முடியாது.

இதன் காரணமாக தமிழ் நாட்டு அகதிமுகாம்களில் உள்ள ஈழத்தமிழ் அகதி மக்களை அனுப்பி வைப்பதை உடன் நிறுத்துமாறும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் ஜெனிவா தலைமையகம் இந்திய அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு- கிழக்கில் யுத்தம் நடக்காத பகுதி என்றும் எதுவுமில்லை மீளச் சென்று குடியேறிய அகதி மக்களும், அகதி முகாம்களில்தங்கியுள்ள அகதி மக்களும் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டிற்கு கப்பல் மூலம் பல அகதி மக்கள் வந்து சேர்ந்துள்ளனர். இவ்வாறு வந்து சேர்ந்த மக்களில் பலர் சிறிலங்கா படையினரால் பாதிக்கப்படும் குருநகர் பகுதியிலேயே தங்கியுள்ளனர். இப்பகுதி இராணுவத்தின், கடற்படையினரின் தாக்குதலுக்குள் உட்படுகின்றது.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பி வந்த குடும்பஸ்தர் ஒருவர் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளார். இப்பகுதியைச் சேர்ந்த பலர் காயமடைந்தும் உள்ளனர்.

ஜோசப் அன்ரனி பிரான்

## இல[...]கத் தமிழ் அகதிகளை உடன் திருப்பி அனுப்ப வேண்டும்

## தோப்பூர் பாலபொலிஸ்காவலரண்மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல்

### இரு பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூரில் நேற்று முன்தினம் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இரவு 9மணியளவில் மாலத்தோப்பூருக்கும் தோப்பூருக்கும் இடையில் தோப்பூர் பாலத்திலிருந்த பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை

- ரி 56-1 ரக துப்பாக்கி -03
- வோக்கி - 01
- ரி- 56 மகசின் - 15
- ஏ. கே. மோல்சர் - 04
- நடுத்தர ரவைகள் - 418
- றெயின் கோட் - 06
- ரோச் - 01

என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## எதிரணியின் மேதினப் பேரணியில் 15 லட்சம் மக்கள் சேர்ந்தனர்

### பெயர் கூற விரும்பாத சிரேஷ்ட அமைச்சர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மேதினத்தில் சுமார் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாகவும் இச் சனமும் இலங்கை காணவில்லை என அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெரித்தாஸ் சிங்கள சேவைக்கு தொலைபேசியில் தெரி தான் யார் என்பதை தெரிவிக்க மறுத்து விட்டார். மேலும் அவர் தற்போது மக்கள் அலை பொதுஜன ஐக்கிய முன்னணி மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் என வே

ஜோசப் அன்ரனி பிரான்சிஸ் என்ற இந்த நபர் கடந்த
(6ஆம் பக்கம் பார்க்க)

கொண்டதாகவும் இச் சன சமுத்திரத்தை இவ்வளவுகால

க்கு தொலைபேசியில் தெரிவித்த இவ் அமைச்சர்

கொண்டுள்ளதாகவும் எனவே
(6ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய அரசிடம் ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை உடன் திருப்பி அனுப்புவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

வேலூர் தடுப்பு முகாமிலிருந்து நான்கு பேர் தப்பியோட எடுத்த முயற்சி தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் ஞானசேகரன் எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளித்த முதல்வர் ஜெயலலிதா மேலும் கூறுகையில், தமிழ் நாட்டில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளாலும், தீவிரவாதசக்திகளுக்கு அனுதாபம் தெரிவிப்போராலும் தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி முழு இந்தியாவுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் அவர்களை உடன் தாயகத்திற்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தமிழக அரசைப் பொறுத்த வரையில், இலங்
(6ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தேவை இல்லாவிடின் கைவிடலாம்

## -ஜே. ஆர். ஜெயவர்த்தனா

இலங்கை - இந்திய உடன்படிக்கை வெறுமனே இவ் இரு நாடுகளும் மேற்கொண்ட ஆலோசனை ஆகும்- இதனை விரும்பினால் நடைமுறைப் படுத்தலாம் இல்லை எனில் விடலாம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

அவர் மேலும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை விட அதிகமாக எதுவும் ஒரு தேசிய அரசினால் வழங்க முடியாது. அதே வேளை இதிலுள்ள சலுகைகளை இங்குள்ள சிறுபான்மையினர் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள் என்றார். அந்த உடன்படிக்கை தொடர்பாக சமாதானப்படை இங்கு வந்தது போல் சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படன அந்த உடன்படிக்கை பற்றி இப்போ எவரும் பொருட்படுத்துவதில்லை என மேலும் தெரிவித்தார்.

இந்தியப் படையை இந்நாட்டை விட்டு வெளியேற்றியது முட்டாள் தனமான நடவடிக்கையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான

# நெதர்லாந்து - சிறிலங்கா பேச்சுக்கள் ஆரம்பம்

(கொழும்பு)

நெதர்லாந்தில் தங்கியுள்ள சுமார் பதினையாயிரம் தமிழ் அகதிகளையும் திருப்பி அழைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை டச்சு அரசாங்கமும் சிறிலங்கா அரசாங்கமும் ஆரம்பித்துள்ளன.

இது தொடர்பாக டச்சு அரசாங்கம் மேலும் கூறுகையில் அரசியல் குழப்ப நிலை காரணமாகவே இவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டி ஏற்பட்டதாகவும் அந்த நிலை தற்போது தணிந்து இருப்பதால் அவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டச்சு அரசாங்கம் ஐ. நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் அகதிகள் நாடுதிரும்புவது பற்றி ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்
(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், பா. உ கள், அரச அதிகாரிகள்

# லஞ்ச ஊழல் குறித்து விசாரிக்க ஆணைக்குழு அமைக்க முடிவு

(கொழும்பு)

லஞ்ச ஊழல்கள் சம்பந்தமாக சிறிலங்கா அரசிற்கு ஏற்பட்டுள்ள மோசமான அபிப்பிராயங்களை மாற்றும் முகமாக அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்மட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஊழல்களை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஐ தே. கட்சி அரசால் 1983இல் இத்தகைய ஓர் ஆணைக்குழு அமைக்கப்பட்டு அது இயங்கமுடியாத நிலை ஏற்பட்டதன் காரணத்தால் அது செயலற்றுப் போனது.

லஞ்ச ஊழல் சம்பந்தமாக விசாரிக்க ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அண்மையில் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஐ. தே. கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டது.

இப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கத்தவறிய மைக்காக உப சபாநாயகர்
(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க பொதுச் சபையின் கூட்டம் திடீர் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்

இன்றுகூடவிருந்த இப்பொதுச்சபையைக் கூட்டுவதில்லை எனதிடீரென ஜனாதிபதி இவ்வாறு முடிவு செய்துள்ளதாகவும் இதனால் பல பொதுச் சபை உறுப்பினர்கள் விரக்தி அடைந்துள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்

பொதுச் சபை அங்கத்தவர்களில் அநேகர் பிரேமதாச குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் எனவே பொதுச்சபை உறுப்பினர் இன்றைய கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்
(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனில் குடியேற ஹேமா விண்ணப்பம்

(கொழும்பு)

பிரிட்டனில் குடியேறுவதற்கான விசாகோரி மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி விண்ணப்பம் செய்துள்ளதாக பிரித்தானியத் தூதுவராலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இவ் விசா குறித்து தமது வெளிநாட்டு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தற்போது இவரின் விண்ணப்பம் தமது நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.
(6ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணிப்பேரணியின்போது மின்சாரம் துண்டிப்பு

(கொழும்பு)

தெரு விளக்குகள் அணைக்கப்பட்ட நிலையிலும் திட்டமிட்டவாறு இருளையும் பொருட்படுத்தாது மேதின ஊர்வலம் நடைபெற்றதாக சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்

மேதின ஊர்வலம் கிருலபனை மைதானத்தில் இருந்து நண்பகல் 12 10 மணிக்கு
(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க.புதியசெயலராக காமினி விஜேசேகரா

(கொழும்பு)

டாக்டர் காமினி விஜேசேகரா ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால் நேற்று மாலை வரை இதற்கான கடிதம் உத்தியோகபூர்வமாக அவருக்குக் கிடைக்கவில்லை என்றும் ஆனால் ஜனாதிபதி தொலைபேசி மூலம் தனக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

27-04-94 அன்று மாலை 5 மணிக்கும் 6 30 மணிக்கும் இடையில் ஆவரங்கால் அச்சுவேலி பிரதான வீதியில் 1½ பவுண் பெறுமதியுள்ள கைசெயின் (சங்கிலி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். (8181)

### கோழி பராமரிப்பவர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும் கீழ் காணும் முகவரிக்கு 5-5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும்: அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

### தவறிவிட்டது

யாழ் நாயன்மார் கட்டை சேர்ந்த இராசரட்னம் உதயகுமார் என்பவருடைய அடையாளஅட்டை இல 561771 847x கா.சிமெந்து கூட்டுத்தாபன அட்டையும் 27-4-94 யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது இதை எடுத்தவர்கள் ஈழநாதம்பணிமனையில் ஒப்படைக்கவும். (8183)


### உருவப்படம் திறப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை சாலையில் சாலைப்பரிசோதகராக கடமைபுரிந்து மரணமடைந்த அமரர் மாப்பாணபிள்ளை-நித்தியானந்தசிவம் அவர்களின் உருவப்படம் பருத்தித்துறை சாலையில் தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கச் சார்பில் சாலை உதவி முகாமையாளர் திரு. க. நவரத்தினம் திரை நீக்கம் செய்து வைத்தார்,

### பிரத்தியேக வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் புகையிரத நிலைய முகாமில் உள்ள மாணவர்களுக்கென தினமும் பிரத்தியேக வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன, விடுத

# ஐ. தே. க மாவட்ட மட்டத்திலும் பிளவுறும் நிலையில் உள்ளது

## மக்கள் ஐக்கிய முன்னணி அறிக்கை

(கொழும்பு)

ஐ தே கவின் இரு குழுக்களிடையிலான உட்கட்சி போராட்டத்தினால் கட்சி அழியத்தொடங்கி விட்டதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது: தென்மாகாணசபை தேர்தலில் இக்கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி காரணமாக மக்கள் அபிப்பிராயம் கட்சிக்கு எதிராகிவிட்டது.

தாங்கமுடியாத வாழ்க்கைச்செலவை 17 வருடங்களாக மக்கள் வாய் மூடி மௌனிகளாக அனுபவித்து வருகின்றனர் இளைஞர் தொழிலின்றி இருண்ட எதிர்காலத்தை நோக்கியுள்ளனர் ஏமாற்றம் காரணமாக மக்களிடம் இருந்து எழும் எதிர்ப்புகள் துப்பாக்கிகளால் அடக்கப்படுகின்றன ஐ.தே.கவின் உயர்பீடத்தை பிடித்துள்ள ளபுற்று நோய் இப்போது மாவட்டத்திற்கும் பரவிக்கொண்டிருக்கின்றது.

இந்நாட்டில் இப்போது எவருக்கும் பாதுகாப்பில்லை பிரதேசசபை உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர் அனைவரும் பாதுகாப்புக்கு அரசிடம் கோருகின்றனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சில அமைச்சர்களின் செயலே ஐ. தே. கதோல்விக்கு காரணம்

## அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் அமைச்சர்களின் போக்கே தென்மாகாண சபையில் ஐ. தே க தோல்வியடைந்தமைக்கு காரணம் என அமைச்சர் ஒருவர் சாடியுள்ளார் தென்மாகாணசபை தேர்தல் தோல்விக்கு காரணம் குறித்து அண்மையில் பிரதமரின் அலுவலகரான அலரிமாளிகையில் ஒரு சந்திப்பு நடைபெற்றது.

இதில் பிரதமர் ரணில், இராஜாங்க அமைச்சர் அரிசந்ர லுனுவில உட்பட பல எம். பிகள் கலந்து கொண்டார்கள் இதில் கட்சியின் தோல்வி குறித்த கருத்து வெளியிட்ட அமைச்சர் ஒருவர் தோல்விக்கு ஐ. தே க.வே காரணம் என்றார்.

ஊழல், வாழ்க்கைச் செலவு பளு, வேலையில்லாத் திண்டாட்டம், மாணவர் இலவசத்திட்டங்களில் வெட்டு, சிறுபான்மையினரை அணைத்துச் செல்ல தவறியமை, ஐ. ஐ. தே. முவாக்குகளை பெறத்தவறியமையும் ஐ தே க' வின் தோல்விக்கு காரணம் அரசு மக்களுக்கு தன்னை அர்ப்பணித்துள்ளது என்ற காரணத்தை மக்களிடையே உருவாக்கியிருக்க வேண்டும் அவ்வாறு செய்யப்படவில்லை. ஒரு அமைச்சருக்கு 27 ஆவது கடிதம் எழுதிய பின்னரே பதில் வந்தது இது அரசின் மீது வெறுப்பையே ஏற்படுத்தும் என்றும் அந்த அமைச்சர் கூறினார்.

## மாத்தளை நகரசபை உறுப்பினர் கொலை

# விசாரணைக்குழு அமைக்க உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ஹுசைன் கடந்த 15ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என மாநகரசபையின் அனைத்துக்கட்சி உறுப்பினர்களும் மாநகர மேயரை கேட்டுள்ளனர்.

இக்கொலை தொடர்பாக சி ஐ. டி. பொலிசாரும் மாத்தளை பொலிசாரும தனித்தனியாக விசாரணை நடத்தி வருகின்றனர் அப்படி இருக்கும் போது விசாரணைக்குழு அமைக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோர முடியாது ஆனால் கொலை சம்பந்தமான முழு விபரங்களையும் ஜனாதிபதிக்கு கூறியுள்ளேன் பெ லிசாரின் விசாரணைகள் திருப்தியளித்தாலே விசாரணைக்குழு அமைக்குமாறு நான் ஜனாதிபதியை கோர முடியும்.

அதேசமயம் எனக்கு எதிராக கொலைசெய்யப்பட்டவரான ஹுசைன் சுமத்திய குற்றச்சாட்டுகளையும் விசாரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன் என்றார். மூன்று மாத காலத்திற்குள் விசாரணை முடிவுகள் மக்களுக்கு 'அறிவிக்கப்படாவிட்டால் சுதந்திரக்கட்சியின் மூன்று உறுப்பினர்கள் தமது பதவியை இராஜினாமா செய்வார்கள் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் மேயரின் கவனத்திற்கு கொண்டுவந்தார் .

## படையினர் துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ளசிறிலங்கா இராணுவக்கரையோரக் காவலரண்களில் இருந்து நேற்று முற்பகல் 10-30 மணியளவில் துப்பாக்கிச் சூடு விட்டு விட்டு நடத்தப்பட்டது.

அதேவேளை உலங்குவானூர்தி ஒன்றும் தீவுப்பகுதிக்கும், பூநகரி - கல்முனை காஞ்சகாட்டுப் பகுதிகளுக்கும் இடையே போக்குவரவில் ஈடுபட்டிருந்தது. (21)

## குடும்ப தினம் பிரகடனம்

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15ஆம் திகதியை சர்வதேச குடும்ப தினமாக கடைப்பிடிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது. இதன் மூலம் குடும்ப நலன்களை மேம்படுத்தி உலகரீதியாக சமூக அபிவிருத்தி காண்பதே இதன் நோக்கமாகும். மாற்றமடைந்துவரும் சமுதாயத்தில் ''வளங்களும், குடும்பப் பொறுப்புகளும்'' என்பதே இந்தஆண்டிற்கான தொனிப்பொருளாகும்.

## அறிவியற் கருத்தரங்கு

நாளை புதன்கிழமை மாலை 4மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியற் கழக மண்டபத்தில் யாழ்.கல்வித்திணைக்கள விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வை. சுந்தரலிங்கம் அவர்கள் ''பூமியில் வெப்பம் அதிகரிக்கின்றதா'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். இதில் மாணவர்கள் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

# பொரு. சுதந்திரமின்றி மனித சுதந்திரம் இல்லை

## - காமினி திசாநாயக்க

(கொழும்பு)

பொருளாதர சுதந்திரமின்றி மனித சுதந்திரம் இருக்கமுடியாது இவ்வாறு முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க கூறியுள்ளார்

கொழும்பு மத்திய தொகுதி ரோட்டரிக்கழக ஆதரவில் ... வினால் அறிமுகப்படுத்தப்பட்டது இதில் எந்தவித மாயாஜாலமும் இல்லை எனவும் தெரிவித்தார்

## வணிக நெறி

# அழிவற்ற சித்த வைத்தியம் மக்களுக்கு கிட்ட வேண்டும்

(நல்லூர்)

பழைய உண்மைகளை மீளாய்வு செய்து மண்ணுக்கும், இம் மக்களுக்கும் பயன்படுத்த வேண்டும். சித்த வைத்தியம் அழிவற்றது. இன்று செப்டிசீமியா என்று கூறும்போது நெருப்புக் காய்ச்சலைப் புறக்கணித்தால் குடலில் துவாரம் விழுந்து குடலில் உள்ள மலம் உடல் உறுப்புகளில் சேரும் போது செப்டிசீமியா ஆகும். குணங்குறிகளைக் கொண்டு நாம் நோயை இனம் காண முடியாது எனவே நாம் முற்குறியை அறிந்து நோயைக் கண்டுபிடிக்க வேண்டும் இவ்வாறு வட-கிழக்கு மாகாண ஆயுர்வேதப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உரோ மகேஸ்வரன் கூறினார்.

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் வைத்திய பேரறிஞர் க பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; நானும் ஒரு பரம்பரை வைத்தியர். சித்த வைத்திய வளர்ச்சியில் ஆர்வமுடையவர் சித்த வைத்தியம் என்ற பெயரில் போலி வைத்தியம் செய்பவர்களைமக்கள் இனங்காண வேண்டும். சித்த வைத்தியம் படித்துவிட்டு ஆங்கில மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. சுதேசிய வைத்தியப் பட்டதாரிகள் சித்த மருந்துகளையே நோயாளிகளுக்கு வழங்க வேண்டும். இந்த வகையில் உங்கள் முயற்சியை வளர்ப்பதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் என்னாலான உதவிகளைச் செய்வேன் என்று கூறினார்.


யாழ் மாவட்ட லியோ கழகங்களின் சமூக சேவை நிதிக்காக

யாழ் மாவட்ட லியோ கழகங்கள் இணைந்து வழங்கும்

**மாபெரும் கலைவிழா**

இடம்: யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு

காலம்: 8-6-94 புதன்கிழமை பி. ப 3-00 மணி

(4.5.94இல் நடைபெறவிருந்த நிகழ்ச்சி இத் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது)

அன்பளிப்பு: ரூ. 250/- ரூ. 100/- ரூ. 50/- ரூ. 25/-

அனுமதிச்சீட்டிற்கு லியோ கழகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

விளம்பர அன்பளிப்பு:

ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கம்

(சி 9334)


## பிறந்த நாள் நினைவில்



அன்னை மடியில் 03.05.1973

மண்ணின் விடுதலைக்காய் 24-11.1992

பட்டு வருகின்றன, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினரால் நடாத்தப்படுகின்ற இவ் வகுப்புகள் பாடசாலை நாட்களில் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரையும் சனி, ஞாயிறு தினங்களில் காலை எட்டு மணி தொடக்கம் நண்பகல் பன்னிரெண்டு மணிவரையும் நடைபெறுவதாகவும் ஆண்டு எட்டிலிருந்து ஆண்டு பதினொன்று வரையான சுமார் அறுபது மாணவர்கள் இவ் வகுப்புகளில் பயின்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது,

ஆனால் கொலை சம்பந்த

# ஐ.ஐ.தே.மு. தொடர்ந்து தனித்துச் செயற்படும்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்தும் இயங்கும் அடுத்த தேர்தலிலும் போட்டியிடுமென்று முன்னணியின் பொதுச் செயலாளரும், வடமேல் மாகாண முதல்வருமான ஜி எம் பிரேமச்சந்திரா கூறியுள்ளார்

அவர் அண்மையில் செய்தியாளருடன் பேசுகையில் மேலும்கூறுகையில்; முன்னணியைச் சேர்ந்த சிலர் ஐதேகவில் சேர்ந்திருக்கலாம் சிலர் பொதுசன ஐக்கிய முன்னணிக்குப்போயிருக்கலாம். ஆனால் எமது முன்னணி தொடர்ந்து செயற்படும் எனவும் தெரிவித்தார்

மூன்று உறுப்பினர்கள் தமது

ரோட்டரிக் கழக ஆதரவில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; மக்களின் பொருளாதார சுதந்திரத்தைத் தூண்டாமல் அவர்களுடைய வாக்குரிமையைக் கோர முடியாது இந்த உண்மை தற்போது அரசியல் தலைவர்களால் தெளிவாக உணரப்பட்டுவருகிறதுஎனவும் தெரிவித்தார்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு உதவும் திட்டம் 1948 இல் டி. எஸ் சேனநாயக்கா

# இருட்டில் கறுப்புப் பூனை தேடுகின்ற அதிகாரிகள்

### - ஆளுநர் லயனல் பெர்னாண்டோ

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது இருட்டறையில் கறுத்த பூனையைத் தேடும் கதைதான் நினைவுக்கு வருகிறது, இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோகூறியுள்ளார். மட்டக்களப்பில் நடைபெற்ற சிவில், நிர்வாக, புனர்வாழ்வு, புனர[illegible]புக்கு பொறுப்பான [illegible]அமைச்சரவை உப குழுக் கூட்டத்தில் பேசிய ஆளுநர் லயனல் பெர்னாண்டோ மேலும் கூறுகையில் இம் மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியாத நிலை காணப்படுகிறது. யதார்த்தத்தைப் புரிந்து கொ டும், பிரதேச செயலாளர்களின் பணிகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் கூட்டுப்படைத் தலைமையிடமிருந்து கிழக்கு மாகாண அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்-

# இருநேர பாடசாலைகளாக இயங்கப் பணிப்பு

தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த உயர்தரப் பாடசாலைகள் சில நாளை முதல் இரு நேரப் பாடசாலைகளாக இயங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பணிப்புரை விடுத்துள்ளார். மகாஜனாக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், நடேஸ்வராக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்' மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளே நாளை முதல் இரு நேரப் பாடசாலைகளாக செயற்படவுள்ளன.

# வணிக நெறி இறுதிப் பரீட்சை

பலாலி ஆசிரிய கலாசாலையில் 1993ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வணிக நெறி மாணவர்கள் அவர்களின் இறுதிப் பரீட்சை தொடர்பாகக் கலாசாலை அதிபரை உடனடியாகச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கோமாரியில் உணவு முத்திரை

(நமது நிருபர்)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'கோமாரி' கப்பல் இன்று காலை பருத்தித்துறையை வந்தடையும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை கிடைக்கப்பெற்ற அவசர செய்தியில் கோமாரி புறப்பட்டு விட்டதாகவும் இன்றுகாலை பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கப்பலில் இடம்பெயர்ந்தோருக்கான உணவு முத்திரைகளும்எடுத்து வரப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை நரோமா கப்பல் 150 பயணிகளுடன் இன்றுகாலை காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடையும் எனவும் இதில் வரும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு கோமாரி பருத்தித்துறை வந்து மாலையில் இங்கிருந்து 150 பயணிகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன் துறைக்குச்செல்லும் நரோமா இப்பயணிகளை ஏற்றிக் கொண்டுமாலையே திருமலை நோக்கி புறப்படும் என அவர் மேலும்தெரிவித்தார். (ச,க)



## 2-ம் லெப். கௌரி

## (வீரசக்தி அமுதினி)

ஈரெட்டு வயதினிலே
கரத்திலே துப்பாக்கி ஏந்தினாய்
களம் பல கண்டாய்
களிப்புடன் நின்றாய்
வீறுகொண்ட வேங்கையாய்
களத்தில் உயர்ந்தாய் இன்று
மூவேழு வயதினிலே - உனைக்
காணாமல் தவிக்கிறோம் - அம்மா

கௌரி வீதி, - குடும்பத்தினர்
ஆவரங்கால். (8186)

# கிராமசேவகர் நியமனம் மேமாதம் முதல்வாரத்தில்

பொலிஸ் அறிக்கை பெறப்படமுடியாமையால் நியமனம் வழங்கப்படாதிருக்கும் கிராம சேவகர் பதவிகளுக்கான நியமனங்கள் இம் மாதத்தில் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான நியமனங்களின் போது பொலிஸ் அறிக்கைக்கு பதிலாக கிராமசேவையாளரின் சிபாரிசுக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# தனித்தனி குடிசைகள் அமைப்பதற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் உள்ள மக்களுக்கென தனித்தனியான குடிசைகள் அமைக்கும் பணி இம்மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது கொட்டகைகள் அகற்றப்பட்டுஒருபரப்புக் காணியுடன் குடிசைகள் அமைக்கப்படவுள்ளன, தற்போது குடியிருப்பு அமைந்துள்ள இடத்திலும் வேறு பகுதிகளிலும் இக்குடிசைகள் அமைக்கப்படவுள்ளதாக குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டது, (22)

# நினைவு கூருகின்றோம்...

## 03.05.1994

1988-ம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விக்கி** (ஐயாத்துரை பிரபாகரன்-வந்தாறுமூலை-மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜெகன்** (கோவிந்தசாமி தெய்வேந்திரன்-ஊறணி, வல்வெட்டித்துறை-யாழ்)

1989-ம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் குத்தியும், சுட்டும் கொல்லப்பட்ட அதே பகுதிப் பிரஜைகள் குழுப்பொருளாளர்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9326)

Nallur Branch Library

# முதலமைச்சர் ஜெயலலிதா என்னை வந்து சந்திக்கட்டும்

## மத்திய அமைச்சர் சவான்

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடவடிக்கையை மத்திய அரசு கவனித்து வருகிறது ஆனால் அ. தி மு க அரசைக் கவிழ்க்கமாட்டோம் என மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறினார். அண்மையில் சென்னை வந்த உள்துறை அமைச்சர் சவான் காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடையே பேசினார்.

கேள்வி: தமிழக அரசை கவிழ்க்க காங்கிரஸ் சதிவலை பின்னுகிறது என சட்டசபையில் முதலமைச்சர் கூறியுள்ளாரே?

பதில்: அவர் என்ன சொன்னார் என எனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை அது கிடைத்த பின்புதான் உரிய பதில் கிடைக்கும். சில சமயம் தவறான தகவல் கூட வந்துவிடும். அதன்மீது ஏதாவது சொன்னால் அது அநாகரிகமாகிவிடும்.

கேள்வி: தமிழ்நாட்டில் புலிகளின் நடவடிக்கை அதிகரித்து இருப்பதாக நீங்கள் கூறி உள்ளீர்கள். இதனால் தமிழ்நாடு அரசு அகற்றப்படும் அபாயம் உள்ளதா?

பதில்: நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இது போன்ற தீவிரவாத செயல்கள் நடக்கின்றன. தமிழகம் ஒன்றும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் தமிழ் நாட்டில் புலிகளின் நடவடிக்கையை மத்திய அரசு உன்னிப்பாக கூர்ந்து கவனித்து வருகிறது ஆனால் தமிழ்நாடு அரசை கவிழ்க்க மத்திய அரசு எண்ணவில்லை,

கேள்வி: பிரதமர் நரசிம்மராவின் பிரிட்டிஷ் விஜயத்தின் போது உளவுத்துறையான றோ புலிகளுடன் லண்டனில் உடன்படிக்கை செய்து கொண்டதாக சட்டசபையில் ஜெயலலிதா கூறியுள்ளாரே?

பதில்: ஆதாரம் இல்லாமல் இது போன்ற குற்றச்சாட்டுகளை பெரிய பதவியில் இருப்பவர்கள் சொல்வது நல்லதல்ல. பொறுப்புள்ள மனிதர்களிடமிருந்து பொறுப்புள்ள செயலைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்

கேள்வி: டில்லியில் நீங்கள் புறப்படுவதற்கு முன் விடுதலைப்புலிகள் பற்றி முதலமைச்சருடன் பேசுவதாக கூறியுள்ளீர்கள். ஆனால் நீங்கள் முதலமைச்சரை சந்திக்கவில்லை என தமிழக அரசு தரப்பில் கூறப்படுகிறதே?

பதில்: நான் டில்லியில் அப்படிப் பேசவில்லை. மாநில முதலமைச்சர்கள் தான் மத்திய உள்துறை அமைச்சரை சந்தித்து பேசவேண்டும். ஆனால் இங்கே விநோதமாக இருக்கின்றது. எல்லா மத்திய அமைச்சர்களும் முதலமைச்சரை சந்திக்க வேண்டும் என கூறுகின்றனர். தேவையானால் என்னை முதலமைச்சர் சந்திக்கட்டும்.

கேள்வி: தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதா?

பதில்: சில காலங்களிற்கு முன் அதிகம் இருந்தது. இப்போது நான் எதுவும் சொல்வதற்கில்லை. நிலைமையை ஆராய்ந்த பின்னரே கூற முடியும்

கேள்வி: தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதித்துள்ளது. குறிப்பாக வீதிக்கொள்ளை கொலைகள் அதிகரித்து விட்டதே?

பதில்: நிலைமை மோசமாகிவிட்டால் அப்போதுதான் மத்திய அரசு தலையிடும். மாநில ஆளுனரின் அறிக்கை அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கமுடியும்.

கேள்வி: விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை கைது செய்ய செல்லவில்லையா?

பதில்: இல்லை சிறிலங்கா அரசு ஒத்துழைக்காததால் பலன் இல்லை.

---

## பிறந்ததும் இந்நாள் எமை விட்டுப் பறந்ததும் இந்நாள்!



**செல்வி இளவேணி அதிருபசிங்கம்**
(வல்வெட்டித்துறை)

மூன்றொடு ஐந்தமைந்த எழுபதாம் ஆண்டிந்நாளில்
ஈங்கெம் திருமகளாய் எழிலுடனே நீ பிறந்தாய்
அட்டமி - நவமி அருகமைந்த செவ்வாயாம் இந்நாளில்
விட்டெம்மை நீ விரைந்து [illegible]ணகமே தான் பறந்தாய்.

உன் காலடிகளைப்
பிரார்த்திக்க
எம் கண்ணீர்ப் பூக்கள்.

ஐயா, அம்மா, அக்கா, தம்பியர்

---

# காங். உறுப்பினர்கள் மீது ஜீனத் சரிபுதீன் புகார்

(சென்னை)

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் ஒருவர் அதே கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் மீது குற்றஞ்சாட்டி முன்னுரிமைப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தவித்தியாசமான ஒரு நிகழ்வு நேற்றுமுன்தினம் தமிழக சட்டப்பேரவையில் இடம்பெற்றது.

காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினரான திருமதி ஜீனத்சரிபுதீன் கடந்த பதினோராம் திகதியன்று சட்டப்பேரவையின் வளாகத்தில் சென்றுகொண்டிருந்த போது காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களான பீட்டர் அல்போன்ஸ், பாலச்சந்திரன், திண்டிவனம் பன்னீர்ச்செல்வம் ஆகியோர் தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும், தாக்க முற்பட்டதாகவும் குறிப்பிட்டு ஜீனத் சரிபுதீன் உரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார்.

# ஏழுமலை கொலை பற்றி சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்

## தி.மு.க. கோரிக்கை

(சென்னை)

வை. கோபாலசாமி அணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான ஏழுமலை கொலை தொடர்பாக மத்திய அரசின் விசேட புலனாய்வு பிரிவான சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று தி.மு.க பொதுச்செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன்கோரிக்கை விடுத்துள்ளார்.

வை. கோபாலசாமியின் அணியைச்சேர்ந்த முக்கிய பிரமுகரான ஏழுமலை அண்மையில் சென்னை ராயபுரம் பகுதியில் அவரது வீட்டிற்கு அருகில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

# பொதுச்சொத்துசேதத்திற்கு இழப்பீட்டு தொகை பெறப்படும்

## அமைச்சர் செல்வ கணபதி

(சென்னை)

பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்புத் தொகை பாட்டாளி மக்கள் கட்சியிடமிருந்து வசூலிக்கப்படும் என்று மாநில அமைச்சர் செல்வ கணபதி தெரிவித்தார்.

செங்கை எம், ஜி, ஆர் பம்மல் பேரூராட்சி அருகே இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராம்தாஸ் சரிந்து கொண்டிருக்கும் தனது செல்வாக்கை தூக்கி நிறுத்துவதற்காக தொண்டர்களை மீண்டும் வன்முறைக்கு தூண்டிவிட்டு வருகிறார், இந்த வன்முறை வெறியாட்டங்களுக்கு எமது புரட்சி தலைவி அசையமாட்டார், இரும்புக்கரம் கொண்டு இந்த வன்முறையை அடக்க அரசு தயங்க மாட்டாது எனவும் தெரிவித்தார்,

# சுறா மீன் ஆபத்திருந்தும் நீரிணையை நீந்திகடந்தேன்

## சாதனை புரிந்த தமிழக சிறுவன் குற்றாலீஸ்வரன்

(சென்னை)

கொடிய சுறாமீன்களின் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் ஓய்வில்லாமல் நீந்தி முடித்துவிளேன் என பாக்கு நீரிணையை அண்மையில் கடந்து சாதனை புரிந்த 12 வயது தமிழக சிறுவன் குற்றாலீஸ்வரன் தெரிவித்தார்.

[illegible] சியாளர் வீரபத்திரன் ஆகியோர் கையெழுத்திட்டோம்.

கடலில் நீந்தும் போது சுறாமீன்களிடம் இருந்து காத்துக் கொள்ள ஷார்க் ரிபல்லண்ட் என்ற தூளை பயன்படுத்துவோம். இதை இடுப்பில் கட்டி கொண்டால் அந்த [illegible] தூரத்திற்கு ஒருமுறை 15 நிமிட நேரம் வீதம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் 10 கிலோ மீற்றர் இடைவிடாது நீந்தினால் அரை மணிநேரம் ஓய்வு பெறலாம் என்ற விதி உள்ளது

நான் பல்வேறு போட்டிக [illegible]

# நீதிமன்ற தீர்ப்பின் பிரதி மாவட்ட செயலருக்கு வரும்

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்றம் வை. கோ. அணியினர் தி.மு.கவின் பெயர் சின்னம், கொடி என்பவற்றை பயன்படுத்துவதற்கு விதித்த தடையுத்தரவின் பிரதிகள் மாவட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாநில அமைப்பாளர்கள், ஒன்றிய நகரிய கழக செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு தி.மு.கவின் துணைப் பொது செயலாளரான ஆற்காடு வீரசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும் உயர் நீதிமன்றத்தில் பெற்றுள்ள இந்த தடை உத்தரவுக்கு எதிராக எதுவும் எங்கும் நடைபெற்றால் காவல்துறையினரிடம் புகார் செய்வதற்கு வசதியாக இந்தப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

# தி.மு.கவின் பெயர், கொடி பாவிக்க நிரந்தர தடை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகமான தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்ட வை. கோபாலசாமியும், அவரது ஆதரவாளர்களும் தி.மு.கவின் பெயர், கொடி மற்றும் சின்னம் போன்றவற்றைபயன்படுத்துவதற்கு சென்னை நீதிமன்றம் நிரந்தரமாகவே தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக தி.மு.க பொதுச்செயலர் பேராசிரியர் க. அன்பழகன் தாக்கல் செய்திருந்த மனுவின் மீது சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்து இருந்தது தெரிந்ததே

இப்போது இத்தடை உத்தரவு நிரந்தரமாகவே இருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதையடுத்து வை.கோவும் அவரது ஆதரவாளர்களும் தி.மு.கவின் கொடி, சின்னம் மற்றும் பெயர்களை தொடர்ந்து பயன்படுத்தினால் சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனக் கூறப்படுகிறது,

# தினகரன் ஆசிரியரின்மீதான தண்டனையைபேரவை ரத்து

தமிழக சட்டப்பேரவை, சென்னையிலிருந்து வெளியாகும் தினகரன் பத்திரிகை ஆசிரியர் முத்துப்பாண்டியனுக்கு விதித்திருந்த ஒருவார சிறைத் தண்டனையை நேற்று ரத்துச் செய்தது.

நேற்று சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிந்த பின் பேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் குமரி அனந்தன் தம்மால் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்று தொடர்பாக தினகரன் ஆசிரியருக்கு ஒருவார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி அத்தண்டனையை ரத்துச் செய்யும்படி கோரிக்கை விடுத்தார்,

அதற்கு பதிலளித்த சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தாம் தனித்து அந்த தண்டனையை விதிக்கவில்லை என்றும் பேரவையே தண்டனைவிதித்தது என்றும் தெரிவித்தார்,

அப்போது குறுக்கிட்ட முதல்வர் ஜெயலலிதா உரிமை பிரச்சினையைக் கொண்டு வந்த உறுப்பினரே ரத்துச் செய்யக் கோருவதால் பேரவைத் தலைவர் தமது முடிவை மறு பரிசீலனை செய்யலாம் எனத் தெரிவித்தார்

இதைத் தொடர்ந்து சபை முன்னவரும் நிதி அமைச்சருமான நெடுஞ்செழியன் தண்டனையை ரத்துச் செய்யக் கோரும் பிரேரணையை முன்மொழிய தண்டனை ரத்துச் செய்யப்பட்டது-

## சோதனை சாவடிகள்

நெடுஞ்சாலைகளில் கொள்ளைகள் நடப்பதைத்தடுக்கும் நோக்கத்துடன் இருநூறுக்கும் அதிகமான பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருப்பதுடன் இரவு முழுவதும் ஆயுதப் பொலிசார் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

---


## அறிவித்தல்

சுதுமலை, ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய திருவிழாக்காலக்கடைகள் வழங்குதல்எதிர்வரும்3.5.1994 (செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணிக்கு ஆலய

ஐயா, அம்மா, அக்கா, தம்பியர்.

8178)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்

1941-12-19

மறைவு

1994-04 03

### குமார் சிவரட்ணம்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த குமார் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், புங்குடு தீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஆகிய சிவரட்ணம் 03-04-94 ஞாயிறு கொழும்பில் காலமானார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், துஸ்யந்தி, ஜீவானந், நிஸ்யந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பராசக்தி, புவனேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, ஜெயரட்ணம் (பிரான்ஸ்), இராஜரட்ணம் (அபுதாபி), குணரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், செல்லத்துரை, முத்துக்குமார், தியாகராஜன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் 03-05-94 செவ்வாய் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4-ம் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

- மனைவி, பிள்ளைகள்:

(சி-9327)

---

வரன் தெரிவித்தார்.

தலைமன்னாரிலிருந்து தனுஷ் கோடிக்கு பாக்கு நீரிணையூடாக கடந்து சாதனை படைத்த குற்றாலீஸ்வரன் தனது அனுபவங்களை விபரிக்குகையில் '' சென்னையில் இருந்து புறப்படும்போதே இந்த சாதனையை சுலபமாக நிகழ்த்திட முடியும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருந்தது அதனால் எந்த பதற்றமும் இல்லாமல் உல்லாசப் பயணம் செல்வது போன்றே புறப்பட்டுச் சென்றேன் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு புறப்படும்போது இடி மின்னலுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் கடலில் நீந்த அனுமதி கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்தது எனினும் நல்லவேளையாக மறுநாள் மழை ஒய்ந்து விட்டது வழக்கமாக ஆழ் கடல் நீச்சல் தொடங்குமுன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தரவேண்டும் இது எனது சொந்த முயற்சி சுறா மீன்களாலோ அல்லது வேறு எந்த வகையிலோ எனது உயிருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தால் அதற்கு நானே பொறுப்பு - என அதில் கூறப்பட்டிருக்கும் இதில் நானும் எனது தந்தை ரமேஷ், பயிற்

...பில் கட்டி கொண்டால் அந்த வாசனைக்கு சுறா மீன்கள் அருகில் வராது. ஆனால் உரிய நேரத்தில் அந்த தூள் கிடைக்கவில்லை. இருப்பினும் பாதுகாப்பிற்காக வந்த இந்திய கடற்படை கப்பலில் சுறாமீன்களை சுடக்கூடிய ஷார்க் ஷிட்டர் என்ற துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்ததால் ஆறுதல் அடைந்தேன்.

பாக்கு நீரிணையில் சுறா மீன்களின் ஆபத்து அதிகம். ஆழ்கடல் நீச்சல் பழகிவிட்டதால் நான் அதை பொருட்படுத்தவில்லை. நள்ளிரவு 1.10மணிக்கு நான் கடலில் இறங்கியபோது அலைகள் வேகமாக இருந்தது இதனால் அரைமணி நேரம் மிகவும் கஷ்டப்பட்டு நீந்தினேன் அலைகளை கடந்தபின் ஓரளவு சாதாரணமாக நீந்த முடிந்தது.

வழிகாட்டிய படகையே பின் தொடர்ந்து நீந்திச் சென்றேன். ஆனால் எதிர்பாராத விதமாக வழிகாட்டிப்படகு திசைமாறி விட்டது இதை அறியாத நான் கூடுதலாக 7 கிலோமீற்றர் தூரம் நீந்த வேண்டியதாகிவிட்டது கடல் நீச்சலில் சாதனை புரிபவர்கள் 5கிலோ மீற்றர்

நான் பல்வேறு போட்டிகளில்பங்குகொண்டதால் ஓய்வு பற்றிய எண்ணமே எனக்கு எழவில்லை தலைமன்னாரில் கடலில்குதித்ததுமுதல் தனுஷ் கோடி கரை ஏறியதுவரை ஒரு வினாடிகூட நான் ஓய்வு எடுக்கவில்லை. முதலில் 30 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும்வரை நான் எதுவும் சாப்பிடவில்லை. என்னுடன் கப்பலில் வந்த உறவினர்கள் பழரசம் குடிக்கும்படி வற்புறுத்தினர். நான் உடனே எனக்குத் துணையாக வந்த பயிற்சியாளரிடம் ஒன்றுமே சாப்பிடாமல் நீந்திவந்தால் கூடுதல் சாதனையாகக் கருதப்படுமா என விசாரித்தேன் அவரோ அதெல்லாம் ஒன்றுமில்லை. வாங்கிக்குடி என்று சிரித்தபடி கூறினார் அதன் பின்பே பழரசத்தை வாங்கிக் குடித்தேன் அவர்மட்டும் ஆமாம் என்று தலையசைத்திருந்தால் தனுஷ்கோடிவந்துசேரும்வரை எதுவும் குடித்திருக்கமாட்டேன்என்றார்சிறுவன் குற்றாலீஸ்வரன்

எதிர்வரும் ஜுலை மாதத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

---

எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்ள

# ஐ. தே. கவின் திட்டங்கள் ஆராய 6 அமைச்சர் குழு

(கொழும்பு)

எதிர் வரும் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி நடந்து கொள்ள வேண்டிய நிலை குறித்து ஆராய ஆறு அமைச்சர் கொண்ட குழுவொன்றைஜனாதிபதி டி.பி. விஜேதுங்காஅமைத்துள்ளார்;

மேற்படி குழுவில் அமைச்சர்களான தர்மதாசாபண்டா பீ. தயாரத்ன, பெஸ்ட்ஸ் பெரேரா, சந்திர பண்டார நந்தா மெத்தியூ, ஏ சீ.எஸ் ஹமீட் ஆகியோர் உள்ளடங்குவார்கள்;

இக்குழு சென்றமாகாணசபை தேர்தலை தொடர்ந்து ஏற்பட்ட தோல்விக்கான காரணத்தை கண்டறியவும், எதிர் வரும் தேர்தல்களில் கட்சியை வெற்றிபெற செய்வது எவ்வாறு, வேட்பாளர்களை தெரிவு செய்தல் ஆகிய விடயங்கள் குறித்தும் ஆராயும்

---

விழாக்காலக்கடைகள் வழங்குதல் ... 3.5.1994 (செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

(8177 - நிர்வாகம்

---

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார்
ஆலய முன்றலில் அமைந்து அருள்பாலிக்கும்

## அருள்மிகு நாச்சிமார் ஆலய வருடாந்த பொங்கல்விழா

அம்பிகை அடியார்களே!

நிகழும் சித்திரை மீ 20-ம் நாள்
(03-05-94) இன்று செவ்வாய்க்கிழமை
மாலை 4.30 மணிக்கு
அம்பாளுக்கு விஷேச அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பூசையும் நடைபெறும்.

### கலை நிகழ்ச்சிகள்

மங்கள இசை

N. K. நாகராஜா குழுவினர் (சுதுமலை)
E. S. கண்ணன் குழுவினர் (சுதுமலை)
V. K. கானமூர்த்தி
V. K. பஞ்சமூர்த்தி குழுவினர்
(கோண்டாவில்)

இன்னிசைக் கச்சேரி

திரு. T. பத்மநாதன் அவர்கள்

### இன்னிசை மாலை

ஈழத்தின் முன்னணிப் பாடகர்
S.G சாந்தன் குழுவினர்
வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி

ஒளி அமைப்பு
மனோண்மணி (தீவகம்)

ஒலி அமைப்பு
அரஸ் சவுண்ஸ்
(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்
(சி-9328)

- விழா அமைப்பாளர்கள்

# வருவாய் குறைந்தோருக்கான கிராமிய மேம்பாட்டுத் திட்டம்

இன்று நாம் சிறிலங்கா அரசின் இராணுவ பொருளாதார நெருக்குதல்களை எதிர்கொண்டுள்ளோம். அரசின் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள பலவகையான நெருக்கடிகளைச் சமாளிக்கவும், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் தமிழீழத்தின் எதிர்காலப் பொருண்மியத்தைக் கட்டி எழுப்பவும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல துறைகளிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. விவசாயத் துறைக்கு உள்ளீடுகளை வழங்குதல், கைத்தொழில்களை ஆரம்பித்து நடாத்துதல், மக்களுக்கு சேவைகளாக அமையக் கூடிய வர்த்தக நிலையங்களை நியாய விலைகளில் நடாத்துதல் கால்நடைப் பண்ணைகளை ஆரம்பித்து நிர்வகித்தல், கடற்றொழில் உற்பத்தி அதிகரித்தல் போன்ற பல தரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது இவற்றில் கிராம மேம்பாட்டுத் திட்டமும் ஒன்றாகும்.

இன்றைய போராட்ட சூழ்நிலையால் மிகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் கிராமப்புறத்து வருவாய் குறைந்த நிலையில் உள்ள மக்களேயாகும். இவர்களின் நலன்கள் கவனிக்கப்பட வேண்டியனவாகும். அது மட்டுமன்றி எமது சமுதாயத்தில் உள்ள குடித்தொகையில் 75%க்கு மேற்பட்டவர்கள் கிராமத்து மக்களே. எனவே இப்பிரிவிற்குள் வருகின்ற மக்களின் நன்மையைக் கருதிற்கொண்டு இவர்களின் பொருண்மிய முன்னேற்றத்திற்காக யாழ். மாவட்டத்தில் 35 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய மட்டத்தில் பல துறைக்கும் நிதி ஒதுக்கீடுகள் செய்கின்ற போது குடித்தொகையின் பெரும் பகுதியைக் கொண்ட கிராம மக்களுக்கும் நிதி பயன்படுமாறு பார்த்துக் கொள்வதும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

### கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் தன்மையும், நோக்கமும்

தேசிய நிதி அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படும் போது மக்களுக்கும் நேரடியாகப் பயன்பட்டு மறை மனிதசக்தி தொழில் நுட்ப அறிவு போன்றவை முக்கிய இடம் வகிக்கின்றன. எமது தேசத்தில் செல்வம் ஒரிடத்திலும் மனிதசக்தி இன்னோரிடத்திலும் காணப்படுகின்றது. இந்த இரண்டும் இணைந்து செயற்படும் போதுதான் உற்பத்தி ஏற்படுகின்றது. இந்தவகையில் நோக்கும் போது கிராமத்து மக்களின் மனிதசக்தியின் பெரும்பங்கு பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படாமலும் பயன்படுத்தப்பட வேண்டியும் உள்ளமை தெளிவு. இவ்வாறு செய்யும் போது இந்த மக்களிடையேவேலைவாய்ப்பு அதிகரித்து வருவாய் அதிகரித்து வாழ்க்கைத்தரமும் உயர்கின்றது. மேலும் கிராமத்து மக்கள் செல்வம், அறிவு பிற வசதிக் குறைவு காரணமாக தன்நம்பிக்கை குறைந்தும் உற்சாகம் அற்றவர்களாகவும், தமது மனித சக்தியைப் பயன்படுத்தாமலும் சோம்பேறிகளாகவும் வறுமையிலும் வாழ்வதைக் காணமுடிகிறது. இந்த மனித சக்தியை தேசத்தின் வளர்ச்சியில் வீதி அமைத்தல், குளம் புனரமைத்தல், கால்வாய் திருத்தல் போன்ற உட்கட்டுமான வேலைகட்குப் பயன்படுத்தி மக்களும் வேலை வாய்ப்பைப் பெற இத்திட்டம் வழிவகுத்துள்ளது.

### தெரிவுசெய்யப்பட்ட திட்டங்கள்

இன்றைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டும் உணவுத் தேவையை முன்னிட்டும் அதற்கு ஊக்கம்கொடுக்கும் நோக்குடனும் கிராமப்பிரதேச இயற்கைச் சூழலுக்குப் பொருத்தமான கால்நடை வளர்ப்பிற்கு முதலிடம்கொடுக்கப்பட்டுள்ளது எமது பிரதேசத்தின் பால் தேவை பூர்த்திசெய்யப்படாததும் முட்டையின் தேவை பூர்த்திசெய்யப்படாததும் மட்டுமன்றி அதன் விலை உயர்வாகவும் காணப்படுகிறது. இறைச்சியின் விலை வரவர உயர்ந்து செல்கின்றது. இந்த நிலையில் கால்நடை வளர்ப்பு விருத்தி செய்யப்படவேண்டியது என்பது தெளிவு எனவே கால்நடைவளர்ப்பைப் பாரம்பரியமாகவே மேற்கொண்டு வருகின்ற நாம் மேலும் சிறப்பாக இத்தொழிலை முன்னேற்ற முடியும். இவற்றைக் கருத்திற்கொண்டேகால்நடை வளர்ப்பிற்கு நிதியுதவி வழங் ...ணுவ வன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள், கணவனை இழந்த பெண்களும் இத்திட்டத்தில் பயனடைய வாய்ப்பளிக்கப்படுகிறது. இங்கு குறிப்பிடப்பட்ட மக்கள் கடன் வசதிகளைப் பெறக்கூடியவாய்ப்புக்களைக்கொடுக்கக்கூடிய நிர்வாக ஒழுங்குகள் எமது சமூகத்தில் குறைவாக இருப்பதனால் அத்தகையசந்தர்ப்பம் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தனிப்பட்டவர்களுக்கு கடன் வசதி செய்துகொடுப்பதுதவிர சமூகத்துக்குப் பொதுவானதான திட்டங்களும் இங்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. வீதித்திருத்தம், குளம் புனரமைப்பு, வாய்க்கால்கள் துப்புரவு செய்தல், உப உணவுப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன்நோக்குடன் நாற்று மேடைத்திட்டம், காடு வளர்ப்பு போன்றவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் ஒன்றான யாழ் மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்றபெயர்களில் மூன்று கோட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் யாழ்மாவட்டத்தில் 69 அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன

வலிகாமப் பிரதேசத்தில் 36 திட்டங்களும் தென்மராட்சிப் பிரதேசத்தில் 23 திட்டங்களும் வடமராட்சிப் பிரதேசத்தில் 10திட்டங்களும் அந்தந்த கோட்ட நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் செயற்பாட்டுக்கு கிராம உற்பத்திக் குழுவின் பங்கும் உதவியும் குறிப்பிடக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும், நிதி அடிப்படையில் பார்க்கும் போது வலிகாமப் பகுதிக்கு 18இலட்சமும் தென்மராட்சி பகுதிக்கு 12 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது, இங்கு குறிப்பிடப்பட்ட 69 திட்டங்களாலும் சுமார் 650 பயனாளிகள் அல்லது குடும்பங்கள் பயன் பெறுகின்றனர்.

### சுழலும் நிதி

இக்கிராம மேம்பாட்டுக்கு கிடைத்த 35 இலட்சம் ரூபாவில் பொதுத் திட்டங்களுக்கு செலவிடப்பட்ட 5 இலட்சம் ...

...னைகளை எதிர்கொண்டுள்ள காரணத்தாலும் நிதிப் பற்றாக்குறை உள்ள இக்கால போராட்ட சூழ்நிலையில் இவ்வாறு செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

### பயனாளிகளின் பொறுப்பும் கடமையும்

எமது சமூகம் பாரம்பரியமாகவே கால்நடைகளை வளர்த்து பயனடைந்து வருகின்றது. எம்மில் சிலர் மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். சிலர் ஆடு வளர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் பலர் கோழி வளர்ப்பில் அக்கறை கொண்டுள்ளனர். இவை யாவும் நிச்சயமாக இலாபகரமான பொருளாதார நடவடிக்கைகளேயாகும். எமது சூழலுக்கு ஏற்றவாறு இவற்றைத் தெரிவு செய்து கொள்கின்றோம். இலாபகரமான இத்தொழில் முயற்சிக்குக் கிடைத்த பண உதவியை நன்கு பயன்படுத்த வேண்டியது இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பொறுப்பும், கடமையும் ஆகும். அத்துடன் எத்தனையோ முயற்சியாளர்கள் நிதியுதவி வேண்டிநின்ற நேரத்தில் சிலர் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை உணர்ந்து இக்கடனுதவி பெற்றவர்கள் இத்திட்டம் வெற்றியளிக்க தம்மாலான உதவியையும் ஒத்தாசையையும் கொடுப்பது அவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மை தருவதாக அமையும் என்பதை உணர்வார்களாக.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

---

## வீரவணக்கக் கூட்டம்

1ம், 2ம், 3ம், 4ம் மாதங்களில் வீரச்சாவடைந்த தீவகக் கோட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை இரவு யாழ்- வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெற்றது. தீவகக் கோட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. சுபாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொது ஈகச் சுடர்களை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் மகளிர் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

# மிதவாதியான மண்டேலா ஆயுதப்போரை நம்பினார்

## மேதின உரையில் பாலகுமாரன்

மிதவாதியாக இருந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா 1961 இல் நடைபெற்ற படுகொலைகளை தொடர்ந்து வன்முறையாளராக மாறினார். இதை அவர் பகிரங்கமாகவே அறிவித்தார் அந்த நாட்டின் சம்பவங்களை நாமும் எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்வாறு நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மேதின ஃகூட்டத்தில்கலந்துகொண்டுபேசிய தமிழீழ கல்விக்கழகத்தைச்சேர்ந்த பாலகுமாரன்கூறினார், அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நேரத்திலே நான் ஓர் முக்கியமான செய்தியைக் கூறிவைக்க விரும்புகிறேன், உங்களுக்குத் தெரியும் நாங்கள் இன்றைக்கு இந்த நிகழ்வினை நடாத்திக் கொண்டிருக்கும் போது உலகிலே ஓர் நாட்டிலே அந்த மக்கள் தமது விடிவை எண்ணி மகிழ்கிறார்கள், தென்னாபிரிக்கா என்ற நாட்டிலே ஒரு பெரும் போராட்டம் நடந்து அந்த மக்கள் தமது விடிவிற்கு மாறுகின்ற நாள் இது. அந்த நாட்டின் சில சம்பவங்களை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எங்களுக்கு தெரியும் அங்கே நெல்சன் மண்டேலா என்று சொல்லி27வருடம் சிறையிலே இருந்து இன்று வெளியிலே தமது மக்களுடன் சேர்ந்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றார். அவருடைய வரலாற்றைப்பாருங்கள் ஆரம்பத்திலே அவரும் எங்களுடைய பழைய மிதவாத தலைவர்கள் போலத்தான் பேச்சுவார்த்தைகள் சத்தியாக்கிரகம் என்று சொல்லி 1912 ம் ஆண்டிலிருந்து 1961 ம் ஆண்டுவரை ஒரு வித்தியாசமான போராட்ட வடிவத்தில் அவரது கட்சி செயற்பட்டது. ஆனால் 1961 ஆம்ஆண்டுநடந்தபடுகொலைகளுக்குப் பின்னால் அவர் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுத்தார் உலகமக்களுக்கே அறை கூவல் விடுத்து அவர் கூறினார், இனிமேல் நான் ஆயுதப்போராட்டத்தைவிரும்புகிறேன் நான் ஒரு நாசகாரச்சக்தியாக மாறுவேன், நான் வன்முறையைத்தான் நாடுவேன் எனது மக்களுக்காக அதைத்தவிர வேறு வழியில்லை என்றார். அவர் கூறியதற்காக அவரை சிறைவைத்தார்கள். சிறையிலிருந்து 27 வருடங்கள்போராடினார். ...கையளியுங்கள், தலைவர் பேசவாருங்கள் என்று, அது போலத்தான் மண்டேலாவிடம் தென்னாபிரிக்க அரசு கூறியது; உன்னை வெளியே விடுகிறோம் வன்முறைகளை கைவிட வேண்டும் என்று, ஆனால் அவர் மிகத்தெளிவாகக் கூறினார் நான் எப்பொழுதும் எனது கோரிக்கையை கைவிட மாட்டேன், நான் ஒரு சுதந்திரமானவனாக இருந்தாலே அரசுடன் பேச முடியும் நான் அடிமையாக இருந்து பேசமுடியாது எந்தக் கட்டத்திலும் நான் சுதந்திரமானவனாக இருந்தால் மட்டுமே பேசமுடியும் என்று தெளிவாகக்கூறினார், அந்த நிலைமை மாறியுள்ளதை நீங்கள் பார்க்க முடியும் எங்களுடைய தலைவரையும் எமது போராளிகளையும் எமதுமக்களையும் இரண்டாந்தரமக மதித்து தமது கால்களால் நசித்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுத்த கோரிக்கையை நாம் நெல்சன் மண்டேலாவின் இந்த கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியது. அவர் மிகவும் தெளிவாகக் கூறினார் எந்தக்கட்டத்திலும் எந்தவொரு நிபந்தனைக்கும் உட்பட்டு நான் செயற்பட மாட்டேன். என்னுடைய கௌரவத்தை இழந்து எனது மக்களின் நலன்களை அடைவு வைக்க முடியாது எனக் கூறினார், அதன் மூலம் ஓர் முக்கியமான செய்தி, அதனால் தான் அவ்வாறு போராடிய மக்கள் இன்று விடிவு பெற்றகதை எமக்கு ஓர் உற்சாகம் தருகிறது என்றார்.

# ஆசிரியர் ஓய்வு அறை புனரமைக்க நன்கொடை

(வடமராட்சி)

ஹாட்லிக்கல்லூரியில்ஆசிரியர்களுக்கான ஓய்வு அறையை செப்பனிடுவதற்காக ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் பத்தாயிரம் ரூபா நன்கொடை வழங்கப்பட்டது.

நன்கொடையை பெற்றுக் கொண்ட ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு பா. ஜெயகோபால் நன்கொடையைப் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவிக்கையில்.

ஆசிரியர் தினமானது ஆசிரியர் நலன் பேணப்படுவதை மையமாகக்கொண்டு கொண்டாடப்பட வேண்டும். இதற்கு பழைய மாணவர் சங்கங்கள் உதவ முன்வரவேண்டும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கும் போது யாழ். மாவட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி முன்னணிக் கல்லூரியாகத் திகழ்ந்த போதிலும் இராணுவ நடவடிக்கைகளால் இப்பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சில அடிப்படை வசதிகள் இல்லை.

குறிப்பாக ஆசிரியர்களுக்கான அறையில் தங்குவதற்கும் தளபாடங்கள் இல்லை. இக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இவ்விதமான முயற்சிகள் ஆசிரியர்களுக்கு மன நிறைவை வழங்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை பூரணப் படுத்தும் எனக் கூறினார்.

(யோ)

---

## செயற்கை சினைப்படுத்தல்

நல்லினப்பசுக்களை விருத்தி செய்து பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப்பகுதியினர் கால்நடை சுகாதார திணைக்களத்துடன் இணைந்து செயற்கை முறை சினைப்படுத்தல் சேவையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

நல்லினக்காளைகளான ஜேர்சி, சிந்திபோன்றதூயஇனங்களை கொண்டு உள்ளூர் பசுக்களை தரமுயர்த்தும் நோக்கில் கடந்த பங்குனி மாதத்தில் மட்டும் யாழ் மாவட்டத்தில் 566 பசுக்களுக்கு செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காமினிக்கு பதவி வழங்க

கப் பயன்பட்டு மறைமுகமாக பயன்படும் வகையில் நிதி பயன்படுத்தப்பட வேண்டும். குறைந்த வருமானத்தைப் பெறும் மக்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், அதன் பயனாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். அபிவிருத்தியில் உற்பத்தி காரணிகளாக காணப்படுகின்ற மூலதனம்,

வளர்ப்பிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் தெரிவு

இத்திட்டத்தின்மூலம் பயனடைய உள்ளவர்களைத் தெரிவுசெய்யும்போது சிலமுக்கிய அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன சமூகத்தில் வருவாய்குறைந்தவேலையற்றுள்ள ஊக்கம் உள்ள குடும்பத்தவர்கள் இத்திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்படுகிறார்கள். அத்துடன் இரா

செலவிடப்பட்ட 5 இலட்சம் ரூபா நீங்கலாக 30 இலட்சம் ரூபாவும் பயனாளிகளிடம் இருந்து மீளப் பெறப்பட்ட புதிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடனாக புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகக் கொடுப்பது என்பது திட்டமாகும். இவ்வாறாக இந்த நிதி ஒரு சுழலும் நிதியாகப் பயன்படுத்தப்பட உள்ளமை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். பலவிதமான பிரச்சி

யோர் ஏற்றி வைத்தனர். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு பெற்றோர்களும் போராளிகளும் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஜீவா, மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி தமிழ்க்கவி, மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோரின் நினைவுரைகளுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன (22)

27 வருடங்கள்போராடினார். தனது கட்சியினரை ஆயுதபாணிகளாக்கினார். தானும் அல்ஜீரியா சென்று ஆயுதப் பயிற்சியும் பெற்றார். அவர் இன்று உலகத்தின் கண்ணுக்கு ஒரு காந்தியாக சித்திரிக்கப்படுகிறார் இன்று அதுவல்ல உண்மை. அவர் மிகத்தெளிவாகக் கூறியிருக்கிறார். எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது. உங்களுக்குத்தெரியும் மிக அண்மைக்காலமாக இனவாத சிங்கள அரசுகள் எல்லாம் ஒரு கோரிக்கை விடுத்து வருகிறார்கள். வன்முறையை கைவிடுங்கள் ஆயுதங்களை

# மதத்தலைவர்கள் கட்சி அரசியலில ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்

## சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய அரசுக்கும் வட-கிழக்கு மாகாணசபைகளுக்கும் இடையிலான உறவு முறிவடைந்தமைக்கு பிரதான காரணம் இவர்களிடையிலான தொடர்பின்மையாகும். பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும். புதிய அமைப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். இதை வடக்கு-கிழக்கு மக்களுடனும் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தக் கூடியதாக உருவாக்கியிருக்க வேண்டும் என மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க கொழும்புத் தினசரிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இப்பேட்டியின் ஒரு பகுதி நேற்றைய எமது பதிப்பில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சியை இங்கு தருகிறோம்.

கேள்வி;- மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகளை சிறப்பான முறையில் தீர்த்து வைப்பதற்கு உங்களிடம் யோசனைகள் ஏதாவது உள்ளதா?

பதில்:- இதனையே நான் சற்று முன்னர் குறிப்பிட்டேன். புதிய அமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும் அவை மத்திய அரசிற்கும் மாகாண சபைகளுக்கும் இடையே தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பனவாக அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பேச்சுவார்த்தைகள் முறிவதை தடுப்பதாகவும் இது அமைந்திருத்தல் வேண்டும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட அமைப்புகளிடையே மத்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான அமைப்புகள் ரீதியான ஒழுங்குகள் அவசியம்.

கேள்வி: ஜனாதிபதி அமைப்பு முறை தொடர்பான உங்களது அபிப்பிராயம் என்ன? இதனை மாற்றியமைக்கக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நீங்கள் பெறுவீர்களா?

தற்போதைய அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பை கொண்டு வர விரும்புகிறீர்களா?

பதில்; இதனை நாம்மாற்றியமைக்கப் போகிறோம் என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

கேள்வி; அரசியலுக்கும் மதத்திற்கும் இடையிலான உறவுகள் எவ்வாறு இருக்க வேண்டும்?

பதில்; மிகவும் ஆழமான ஒரு அரசியல் கேள்வியை என்னிடம் கேட்டுள்ளீர்கள்?

பௌத்தகுருமார் அரசியலில் ஈடுபடுகின்ற ஒரு நீண்டகால வரலாற்றைத்தான் எம்முடைய பண்டைய மன்னர்கள் காலத்திற்கு முன் கண்டுள்ளோம். ஆனால் எமது கடந்த கால சகல அரசியல் கட்சிகளும் இந்த நடைமுறையை இனவெறிக்காக பயன்படுத்த தொடங்கியிருப்பதை இந்த அரசாங்கம் பெரியளவில் செய்கின்றது. பௌத்த மதத்தலைவர்கள் மட்டுமன்றி சகல மதத் தலைவர்களும் இந்த நாட்டில் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த தமது பங்களிப்பை வழங்க வேண்டும். பௌத்த மதத் துறவிகள் இத்தேர்தலில் போட்டியிடுவதைப் பொறுத்த வரையில் அதை ஒரு நகைச்சுவை என்றே நான் எண்ணுகிறேன். பௌத்த மதத்துறவிகள் மட்டுமல்ல ஏனைய மதத்துறவிகள் எதிர்காலத்தில் தமதுமுக்கியமான பங்களிப்பை அரசியல் கட்சிகளுக்கு செய்யவேண்டியவர்களாகஉள்ளனர். இதற்காக அவர்கள் எந்த கட்சி என்று பாராமல் சுயேட்சையானவர்களாக இருக்கவேண்டும். கட்சி அரசியலில் ஈடுபடாது இருந்தால் தான் நாடு அவர்களை மதிக்கும்; எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் அவர்கள் இணைந்து கொள்ளாது தமது கௌரவத்தை அவர்கள் பேணிக் கொள்ள வேண்டும். நாட்டில் ஏதாவது பிரச்சினைகள், நெருக்கடிகள் தோன்றும் போது அவர்கள் ஆலோசனை கூறலாம் என்றார் சந்திரிகா.

## விஷமிகளால் சேதம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் யாழ் மாநகரசபையினால் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளில் சில விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன; மாம்பழம் சந்திக்கு அண்மையிலும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அண்மையிலும் இருந்த இரண்டு விளக்குகளினதும் கூடுகளின் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டிருந்தன. விளக்குகளை காணவில்லை இவற்றில் ஒன்றினுடைய சிமினி தரையில் உடைந்து கிடக்கக்காணப்பட்டது.

(22)

## போட்டியிட முடிவில்லை

(கொழும்பு)

அடுத்து வரும் தேர்தல்களில் போட்டியிடுவது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி இன்னமும் முடிவு எதையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவ்வாறு முடிவு செய்யப்பட்டால் விடுதலைப்புலிகள் பகிஷ்கரித்தாலும் கூட்டணி போட்டியிடும் என்றும்கிளிநொச்சித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

## அமைச்சர் சொக்சி எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய கட்சியின்ஆட்சியில் உயர் பதவிகளை காமினி திசாநாயக்காவுக்கு வழங்குவதை தான் எதிர்ப்பதாகவும் இதனை மீறி காமினிக்கு பதவி வழங்கப்பட்டால் தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யப்போவதாகவும் அமைச்சர் சொக்சி தெரிவித்துள்ளார்.

சென்ற வாரம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போதுமேற்படி கருத்தை அவர் தெரிவித்ததாக யுக்திய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பயிற்சியாளர்களாக சித்த மருத்துவர்கள்

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ பட்டதாரிகள் பயிற்சி டாக்டர்களாக யாழ் மாநகரசபை சித்த மருத்துவ நிலையத்திலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் மேற்படி நியமனம் கொழும்பு ஆயுர்வேத ஆணையாளரால் நேற்றுமுதல் வழங்கப்பட்டுள்ளது இவ் வருடத்தில் யாழ்பல்கலைக்கழகத்திலிருந்து எட்டு பி.எஸ்.எம்.எஸ். பட்டதாரிகள் வெளியேறி உள்ளார்கள்,

இவர்கள் இருவர் இருவராக இரண்டரை மாத கால பயிற்சிக்காக கொழும்பு ஆயுர்வேத வைத்திய சாலையிலும், நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்திலும், கைதடிசித்த போதனா வைத்தியசாலையிலும், யாழ் மாநகர சபை சித்தமருத்துவ நிலையத்திலும் பயிற்சி டாக்டர்களாகக் கடமையாற்ற உள்ளார்கள் - பயிற்சி டாக்டர்கள் யாழ் மாநகர சபைக்கு நியமித்தது இதுவே முதல் தடவையாகும்.

இவர்கள் பிரதம வைத்திய அதிகாரியின் தலைமையின் கீழ் பயிற்சி டாக்டர்களாக கடமையாற்றுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

## மேதினப் பேரணியில் எழுச்சிகர சுலோகங்கள்

(யாழ்ப்பாணம்)

''உழைப்பவன் கைகளில் அதிகாரம் ஏறிட தமிழீழமே பரிகாரம்'' 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் எமது மண்ணில்'', ''வடக்கென்றும் கிழக்கென்றும் தாயகத்தை பிரியவிடோம்'' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு தமிழீழ மேதின ஊர்வலத்தில் மக்கள் அணியணியாகசென்று கொண்டிருந்தனர்.

அவ்வூர்வலத்தில் மேலும் பல சுலோகங்களை மககள் தாங்கிச் சென்றனர் அவற்றுள் சில வருமாறு, 'பார் சிறக்க ஏர் பிடிக்க வேண்டும் ஊர்சிறக்க உழைக்கத் தயாராக வேண்டும்', 'கொடை வளமாய் வன்னி நாடிருந்தும்-நாம் குடாநாட்டில் ஏன் முடங்க வேண்டும்' 'தேசநலனை முன் வைத்து தேசிய கல்வியை வளர்த்திடுவோம்' 'வேண்டாம்தங்குநிலைப்பொருளாதாரம், வேண்டும் சுயசார்புப் பொருளாதாரம்' போன்ற மேலும் பல சுலோகங்களை கொண்டு சென்றனர்.

சிந்தனைக்கு

கற்கிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்
முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்

— ஔவையார்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## அரசியலில் இராணுவம்

இராணுவத்தால் அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய அபாயம் குறித்து அரசியல் தலைவர்கள் அச்சம்கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் முரண்பட்டுக் கொண்டுள்ள அமைச்சர் சிறிசேன கூரே இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் லக்கி அல்கமவுடன் சேர்ந்து அரசைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாக வெளிவந்த செய்தியும், அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுவரும் சில நடவடிக்கைகளும் இதனையே காட்டுகின்றன.

இச்செய்தியில் எந்தளவிற்கு உண்மையுண்டு, எந்தளவிற்கு உண்மையில்லை என்பதெல்லாம் ஒருபுறமிருக்க இச்செய்தியானது இராணுவம் அரசியலில் அச்சம் ஊட்டும் சக்தியாக மாறிவிட்டது என மறைமுகமாக கூறுவதை எவரும் மறுக்க முடியாது. இது குறித்து இனிமேல் சிறிலங்கா அரசாங்கம் கவனம் செலுத்தாது விடவும் முடியாது.

ஆனால், இது எதிர்பார்க்கப்படாத பிரச்சினை ஒன்றல்ல. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்று சிறிலங்கா அரசாங்கம் முடிந்த முடிவாக இராணுவப் பெருக்கத்தைச் செய்ய ஆரம்பித்தபோது இதற்கான அடித்தளம் இடப்பட்டது என்பதே உண்மையாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டபோது, அதில் எப்படியாவது வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற ரீதியில் இராணுவத்திற்கு ஏகப்பட்ட வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தது. அது அவர்களை பலம் பொருந்திய சக்தியாக மாற்றியது. அதேவேளை, இராணுவத்தில் உள்ளவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்களை சிங்கள மக்கள் மத்தியில் ஹீரோக்கள் ஆகவும் காட்ட முனைந்தது. இதன் காரணமாக, சமூகத்திலும் பெரும் அந்தஸ்து அவர்களுக்கு கிட்ட வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆனால், ஒரு நாட்டின் இராணுவம் வீங்கிப் பெருப்பதென்பது ஓர் ஆரோக்கியமான நிலை அல்ல. எப்பொழுதும் ஏதோ ஒரு [illegible]யில் அது தொல்லைப்படுத்துவதாகவே இருக்கும். அநேக சமயங்களில் வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்றே செயற்பாட்டில் இராணுவம் இறங்குவதே வழமையாகும்.

இதற்கு உலகில் பல உதாரணங்கள் காட்ட முடியும். பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் வளர்த்த இராணுவ...

# தென்னாசியாவின் குடும்ப ஆதிக்க அரசியலும் குடும்ப உறவுச் சிக்கல்களும்

தென்னாசிய அரசியலில் பணம் பொருந்திய குடும்ப வர்க்க ஆட்சி இன்றும் அந்தந்த நாடுகளின் தேசிய அரசியலில் குறிப்பிடத்தக்க பங்கை அந்நாடுகள் 'சுதந்திரம்' பெற்ற காலத்தில் வகித்து வருகின்றன. பாகிஸ்தானில் பூட்டோ குடும்பம், இந்தியாவில் நேரு காந்தி குடும்பம், பங்களாதேசில் சியாஸ் குடும்பம், இலங்கையில் பண்டாரநாயக்கா குடும்பம் என்பவை குறிப்பிடத்தக்கவை. ஏற்படுகின்ற அரசியல் மாறுபாடுகளின் நிமித்தம் வழமையான ஆண் ஆதிக்க ஆட்சி முறைகளுக்கும் வேறுபட்ட வகையில் இவை பெண் ஆட்சி ஆதிக்க முறைமைகளையும் [பெண் பிரதம மந்திரிகளையும்] ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் அரசியல் ஆட்சி முறைகளில் ஆதிக்கம் செலுத்தும் குடும்ப வர்க்கங்கள் பல அமுக்க அழிவு நிகழ்வுகளுக்கும், படுகொலை மரணங்களுக்கும் ஆளாகியுமுள்ளன. ஆனால் இன்று பல்வேறுபட்ட உலக அரசியல் மாற்றங்களிடையேயும் தொடர்கின்ற இக் குடும்ப ஆதிக்க அரசியல் அமைப்புக்களுள் பிளவுகளையும், உறவுச் சிக்கல்களின் சிதைவுகளையும் ஏற்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

பாகிஸ்தானில் இன்று பிரதமராயிருக்கும் பெனாசீர் பூட்டோவுக்கும், அவரது தாயார் நஸ்றட் (Nusrat) பூட்டோவுக்கும் இடையேயான சிக்கல்கள் இதற்கு ஒரு வடிவம் தருகிறது தனது தாய் நஸ்றட் பூட்டோ தனது தகப்பனாரின் கல்லறைக்கு செல்வதை பெனாசீர் பூட்டோ தனது பொலிஸ்படையினர் மூலம் தடுத்துள்ளார் நஸ்றட் பூட்டோவின் ஆதரவாளர்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவரும் தம்மைத் தாமே, 1977இல் பதவி நீக்கப்பட்ட சுல்பிகார் அலி) பூட்டோவின் வாரிசு என மாறி மாறி உரிமை கோருகின்றனர். நஸ்றட் பூட்டோ அம்மையார் அண்மையில், 16 வருடங்கள் நாடு கடந்த சிறைவாசத்திலிருந்து தற்போது மாகாண சட்டசபையில் அங்கம் பெற்ற தனது 39 வயது மகன் முர்ராசா (Murtaza) பூட்டோவை நோக்கியே தமது குடும்ப ஆதிக்க ஆட்சி வாரிசு அமைய விரும்புகிறார்- பெனாசீர் பூட்டோ தனது சொந்த குடும்பத்தினுள்ளேயேதான் ஆண் ஆதிக்க முறைக்கெதிராகப் போராட வேண்டுமென ஒருபோதும் நினைக்கவே இல்லை என அண்மையில் தெரிவித்துள்ளார். பெனாசீர் பூட்டோ தனது சகோதரனின் அரசியல் இலட்சியங்களுக்கும் அவர் மேல் சுமத்தப்பட்ட குற்ற வழக்கிற்கும் எந்த வகையிலும் ஆதரவு கொடுக்க மறுத்துள்ளார். இதற்கு பதிலடி கொடுப்பது போன்று, தாயார் நஸ்றட் பூட்டோ அம்மையார், பெனாசீர் பூட்டோவை சிந்து மாகாணத்தில் உள்ள தனது பரம்பரை வாசஸ்தலத்தினின்றும் அகற்றியுள்ளார் பிரதமமந்திரியாயிருக்கும் பெனாசீர் பூட்டோ தனது தாயார் தனக்கெதிராகச் செய்யும் ஒவ்வொரு காரியமும் தனது இதயத்தில் ஒவ்வொரு சன்னம் பாய்வது போன்ற உணர்வை ஏற்படுத்துவதாக விபரித்துள்ளார்.

தென்னாசிய குடும்ப ஆதிக்க அரசியல் ஏற்படுத்தும் குடும்ப உறவுச் சிக்கல்களுக்கு இன்னுமொரு பரிமாணம் கொடுப்பதாக இந்தியாவின் நேரு குடும்ப நிலைமைகள் காணப்படுகின்றன. இக்குடும்பத்தின் முன்னைய தலைவர்கள் படுகொலை மரணங்களை அனுபவித்துள்ளார்கள். 1984 இல் பிரதம மந்திரியாயிருந்த இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய மகன் ராஜீவ்காந்தி ஏழு வருடங்களின் பின்பு அதே போன்றதொரு இறப்புக்கு உள்ளாக்கப்பட்டார். மற்றைய மகன் சஞ்சே காந்தி 1980இல்விமான விபத்தில் இறந்தார். தற்போது இக் குடும்பத்தின் திருமண உறவில் மனைவிகளாக அமைந்த (Sisters in law) இருவரினால் குடும்ப ஆட்சி ஆதிக்கம் முனைப்படுத்தப்படும் நோக்கைக் காணக் கூடியதாக உள்ளது.

சஞ்சே காந்தியின் மனைவி மேனகா காந்தி இந்தியாவின் சூழல் பாதுகாத்தல், தாவரங்கள், மிருகங்களுக்கான உரிமைகள் பற்றி அக்கறை கொண்டவராக இருப்பினும், அரசியல் அபிலாசை கொண்டுள்ளார். தற்போது நேரு குடும்ப அரசியல் ஆதிக்க தொடர் வாரிசு இவர் என மிகப் பலமான வாதங்கள் ஒருபுறம் இருந்து வருகிறது அடுத்து ராஜீவ் காந்தியின் இத்தாலிய நாட்டு மனைவி சோனியா காந்தி தனது கணவனின் இறப்பை அடுத்து உடனடியாக அரசியலில் நுழைய மறுத்தாலும் தற்போது காங்கிரஸின் முக்கிய நிகழ்வுகளுக்கும் கூட்டங்களுக்கும் தனது மகள் பிரியங்காவுடனும், 24 வயது மகன் ராகுலுடனும் அரசியல் தலைவர்கள் போன்ற பாணியில் சமுகம் அளித்து வருவதும் அரசியல் ஆதிக்க வாழ்வில் அவர் வைத்து வருகின்ற தொடர்பை எமக்குக் காட்டுகிறது.

இக்குடும்ப உறவுச் சிக்கல்களின் வளர்ந்த இன்னுமொரு வடிவமாக இலங்கையில் உள்ள பண்டாரநாயக்கா குடும்பம் காணப்படுகிறது. 77 வயது நிரம்பிய திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது குடும்ப ஆதிக்கக் கட்சியாகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அண்மையில் மேற்கு மாகாண முதல் அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட தனது மகள் சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையினால் வழிநடத்தப்படுவதை விரும்புகிறார். அவருடைய மகன் அநுரா பண்டாரநாயக்கா தனது தாயாருடனான கடும் அரசியல் மோதல்களின் பின் ஆளும் கட்சியாகிய ஐ. தே. கட்சியில் சேர்ந்துள்ளார். அதில் அமைச்சர் பதவியும் பெற்றுள்ளார். ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் ஒரு குடும்ப ஆதிக்கம் அங்கத்துவம் வகிப்பது அக் குடும்ப அரசியல் ஆதிக்க ஆட்சி தொடர்வது என்பது பிளவுகளிலும் உறவுச் சிக்கல்களிலும் மேலும் நிச்சயமானதொன்றாகிறது.

நிவேதனன்

# சிறுபான்மை வெள்ளையர் அஞ்ச வேண்டிய அவசியமில்லை

### நெல்சன் மண்டேலா தெரிவிப்பு

(ஜொகனாஸ்பேர்க்)

தென்னாபிரிக்க தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டின் 9 மாகாணங்களில் ஏழு மாகாணங்களை நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கைப்பற்றும் நிலையில் முன்னணியில் உள்ளது.

கால்பகுதி வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் மொத்த வாக்குகளி[illegible] 55 சதவீத வாக்...

...பகுதியை தேசியக் கட்சி கைப்பற்றும் நிலையில் உள்ளது புத்தலேசியின் இன்காட்டா கட்சி அதன் பலமான நேட்டால் பகுதியில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது

முழுத்தேர்தல் முடிவுகளும் வெளியாக சில நாட்களாகும் இரண்டு கோடிக்கும் மேற்பட்ட வாக்கு அட்டைகள் எண்ணப்படுவது தாமதமாக இருப்பதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே தென்னாபிரி...

...பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்படும் எனவும் அப்படித் தவறும் பட்சத்தில் தம்மை தூக்கியெறிய மக்களுக்கு உரிமை உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தனது அரசில் சிறுபான்மை வெள்ளையினம் உட்பட எந்தக் குழுவினரும் அச்சப்படத்தேவையில்லை நாட்டின் மீள் அபிவிருத்திக்கு அனைவரது பங்களிப்பும் எனக்குத் தேவை என்றார். தீவிர வலதுசாரி வெள்ளையரின் எதிர்ப்பு குறித்தும்...

# யேமன் ஜனாதிபதிகள் மோதலை தவிர்க்குக

### எகிப்திய ஜனாதிபதி கோரிக்கை

(கெய்ரோ)

யேமனில் போட்டித் தலைவர்கள் தம்மிடையில் உள்ள வேறுபாட்டை மறந்து நாட்டின் ஒற்றுமைக்காக செயற்படுமாறு எகிப்திய ஜனாதிபதி முபாரக் கேட்டுக்கொண்டுள்ளார் யேமனின் வடபகுதி ஜனாதிபதி அலி அப்தல்ல சலேக்கும் அவரது எதிரியான தென் யேமன் உதவி ஜனாதிபதி ஐதீத்திற்கும் இடையில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற மோதல்களை தொடர்ந்தே எகிப்து ஜனாதிபதி இவ்வாறு கோரியுள்ளார்

இரு ஜனாதிபதிகளினதும் ஆதரவு இராணுவத்தினர் தமக்குள் மோதிக் கொண்டதில் 170க்கும் மேற்பட்டோர் பலியாகினார் வடயேமனும் தென்யேமனும் 1990இல் ஒன்றிணைந்தமை குறிப்பிடத்தக்கது இவர்களிடையிலான மோதலை நிறுத்த எகிப்திய ஜனாதிபதியின் விசேட தூதுவர் ஒருவர் யேமனுக்கு மத்தியஸ்தம் செய்வதற்காக சென்றுள்ளார்

வட யேமனில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகிறது

இராணுவம் இறங்குவதே வழமையாகும்.

இதற்கு உலகில் பல உதாரணங்கள் காட்ட முடியும். பிலிப்பைன்ஸில் மார்க்கொஸ் வளர்த்த இராணுவமும், பாகிஸ்தானில் பூட்டோ வளர்த்த இராணுவமும் இறுதியில் அவர்களைப் பாதுகாக்கத் தவறியதோடு, நாட்டை விட்டுத் துரத்தவும், மரணதண்டனைக்கு உள்ளாக்கவும் காரணமாகவும் இருந்ததென்பதை இதற்கான சிறப்பான உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும்:

ஆனால், சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து இதுவரையில் அரசியலில் வெளிப்படையாக ஈடுபாடு காட்டியதாக இல்லை. இதனால் இராணுவத்திற்கு அரசியல் அபிலாசைகள் இல்லாது இருக்கும் எனக் கூறிவிட முடியாது. ஏற்கனவே சிறிலங்கா இராணுவத்திற்குள் முரண்பாடுகள் நிறையவே உள்ளன. இம்முரண்பாடுகள் அரசாங்கச் சார்பு, அரசாங்க சார்பற்றவர்கள் என்ற ரீதியிலும் உண்டு.

எடுத்துக்காட்டாக, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்டதாக சிறிலங்காவில் பல தரப்பினர் மட்டத்திலும் கருத்து உண்டு. இதற்கு ஏற்றாற்போல் கொப்பேகடுவ இறுதிக் காலத்தில் பதவியைத் துறந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருந்ததாகவும் பலமான பேச்சு இருந்தது.

அத்தோடு, தற்பொழுது இராணுவ, மற்றும் ஆயுதப் படை அதிகாரிகள் அரசியல் பற்றி நிறையவே சிந்திப்பதாகவும் தெரிகின்றது. பலர் அரசியலில் தீவிரமாக ஈடுபடும் நோக்கம் கொண்டுள்ளதை சில அறிவிப்புக்களில் இருந்து அறிய முடிகின்றது இதேசமயம், இராணுவ அதிகாரிகளின் பதவி உயர்வுகள் பல அரசியற் பின்னணியின் அடிப்படையில் நிகழ்வதினால், அரசியலில் இராணுவத்தினரின் கையும், இராணுவத்தில் அரசியல்வாதிகளின் கையும் ஓங்குவதும் தவிர்க்க முடியாத விளைவுகளாகவும் உள்ளன.

இந்நிலையில், அரசியலில் இராணுவத்தின் பங்கு என்பது தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது. ஆகையினால், இராணுவம் எதிர்கால அரசியலில் எந்தளசிற்குச்செல்வாக்குச்செலுத்த முற்படும் என்பது உயர் பதவிகளில் உள்ள இராணுவ அதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்ததாகவே இருக்கும் ஆனால், ஆட்சியில் இருப்பவர்களை ஆதரிப்பதும் / கவிழ்ப்பதும், புதியவர்களை ஆட்சியில் அமர்த்தவோ. அன்றி தான் ஆட்சியில் அமரவோ, இதில் எதை இராணுவம் விரும்புகின்றதோ அதை அதனால் செய்ய முடியும். இதற்கான சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசாங்கமே உருவாக்கிக் கொடுத்தது என்று கூறுவதில் தவறில்லை.

---

ணப்பட்ட நிலையில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் மொத்த வாக்குகளில் 55 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது ஜனாதிபதி டி கிளேக்கின்தேசியக் கட்சி 30 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது வெள்ளையர் அதிகம் வாழும் மேற்கு கேப்

எனக் கூறப்படுகிறது.

இதனிடையே தென்னாபிரிக்காவின் எதிர்கால ஜனாதிபதியாகும் நிலையில் இருக்கும் கறுப்பினத்தலைவர் நெல்சன் மண்டேலா தம் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் குறிப்

எனக்குத் தேவை என்றார். தீவிர வலதுசாரி வெள்ளையரின் எதிர்ப்பு குறித்தும் கருத்து வெளியிட்ட மண்டேலா சிறு குழுவினரான அவர்களது அச்சுறுத்தல் குறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றார்.

# தென்னாபிரிக்க ஜனாதிபதியாக மண்டேலா பதவி ஏற்க வாய்ப்பு

(ஜொகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற தேர்தல் மூலம் 300 வருடகால வெள்ளையராட்சி முடிவுக்கு வருகின்றது. முதற் தடவையாக பெரும்பான்மை கறுப்பின மக்கள் தென்னாபிரிக்காவின் ஆட்சிபீடம் ஏறுகின்றனர். கறுப்பினத் தலைவரான நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகும் வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகால சிறைவாசத்தை முடித்துக்கொண்ட போது அங்கு இனப்பாகுபாடு இனியும் நீடிக்கும் சாத்தியம் இல்லை என்றே பரவலாக நம்பப்பட்டது. மண்டேலாவின் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் முன்னதாக தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளையின அரசினால் தடை செய்யப்பட்டு மண்டேலாவும் சிறையிலடைக்கப்பட்டார். மண்டேலாவின் புகைப்படங்களோ பேச்சுகளோ அந்நாட்டில் வெளியிட தடைசெய்யப்பட்டது.

எனினும் கம்யூனிஸ வீழ்ச்சியும் தென்னாபிரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்ட அழுத்தமும் அந்நாட்டின் போக்கில்பெரும் மாற்றத்தை தோற்றுவித்தது. ஜனாதிபதி டி கிளேக் மண்டேலாவை விடுவித்ததுடன் ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் மீதான தடையையும் நீக்கினார்.

இன்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கெரில்லாப்போர் நடத்தி விடுதலை இயக்கம் என்ற நிலையிலிருந்து அரசு அமைக்க காத்திருக்கும் ஒரு அமைப்பாக உயர்வு பெற்றுள்ளது. இவ்வமைப்பின் தலைவரான மண்டேலா ஜனாதிபதியாக பதவி ஏற்கும் காலமும் வந்துள்ளது.

தென்னாபிரிக்காவின் வன்முறைகளில் சுமார் 14 ஆயிரம் பேர் பலியாகியிருக்கின்றனர். வன்முறைகள் தேர்தல் நடைபெறும் இவ்வேளையிலும் தொடரினும் தேர்தல் தடங்கலின்றி நடப்பது சற்று நிம்மதிகொடுக்கின்றது 30 மில்லியன் தென்னாபிரிக்க கறுப்பர்கள் தமது நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்,

மாற்றத்தை விரும்பும் தென்னாபிரிக்க வெள்ளையர்கள்தற்போதைய அரசியல் சூழ்நிலை மாற்றம் தவிர்க்க முடியாத ஒன்று என்றே நம்புகின்றனர் வெள்ளையின சிறுபான்மையின் ஆட்சி முடிவடைந்து புதிய சகாப்தம் ஒன்று உருவாகி வருகிறது,

# டென்மார்க் டாங்கி தாக்குதல் 9 சேர்பியப் படையினர் பலி

பொஸ்னியாவின் ஐ.நா அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் டென்மார்க் இராணுவ டாங்கிகள் நடத்திய தாக்குதலில் 9 சேர்பியப் படையினர் கொல்லப்பட்டனர்.

வடகிழக்கு பொஸ்னியாவில் உள்ள டென்மார்க்இராணுவத்தினரின் கண்காணிப்பு நிலை மீது சேர்பியர் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர் டெனிஷ் டாங்கிகள் பதிலுக்கு நடத்திய தாக்குதலில் சேர்பியர்கள் 9 பேர் பலியாகினர் இருமணி நேரத்தில் டெனிஷ் டாங்கிகள் 70 தடவைகள் தாக்குதல் நடத்தியது

இச்சம்பவத்திற்கு பழிவாங்கப் போவதாக சேர்பிய இராணுவ உயரதிகாரி சூளுரைத்துள்ளார்,

இதனிடையே அமெரிக்காவின்இருபத்திரிகை நிருபர்கள் கண்ணி வெடியில் சிக்கிப்பலியாகியுள்ளனர், இவர்களின் கார் கண்ணி வெடி மீதுஏறிய போதே இச்சம்பவம் நடைபெற்றது,

---

திபதி இவ்வாறு கோரியுள்ளார்

வடயேமனில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகிறது

# ஆஸ்பத்திரி தாக்கப்படுகிறது மனித உறுப்புகள் காற்றில்

'கொரஸ்டெ நகர மேயர் பேட்டி

(பொன்)

ஆஸ்பத்திரி தாக்கப்படுகிறது மனித உறுப்புக்கள் காற்றில் பறக்கின்றன நகர் தீப்பற்றி எரிகின்றது என சேர்பியர்களின் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ள கொரஸ்டெ நகர மேயர் இஸ்மத் பிரிகா தொலைபேசி மூலம் சர்வதேச நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியின்போது குறிப்பிட்டுள்ளார்

நேட்டோ மேற்கொண்ட ஓரிரு விமானத் தாக்குதலைப் பெருட்படுத்தாத 'சேர்ப்' படைகள் 'கொரஸ்டெ' நகரை மும்முரமாகத் தாக்க ஆரம்பித்துள்ளன. இருபது நாள் நீடித்த தாக்குதலில் 302 பேர்களைக் கொன்றதோடு மொத்தம் 1072 பேரைக் காயங்களுக்குள்ளாக்கியுள்ளன

கொரஸ்டெ நகரபிதா இஸ்மத் பிரிகா தனது தொலைபேசிப் பேட்டியில் சேர்ப் துருப்புக்கள் மீது உடனடியாக நேட்டோ ஐநா விமானத் தாக்குதல்கள் நடைபெற வேண்டுமெனத் தெரிவிக்கும் பாணியில் பேசிய அவர் 'மிஸ்டர் (பில்) கிளின்டன், மிஸ்ரர் (பட்ரஸ்) பட்ரஸ் - காலி 65,000 பிரஜைகள் பேரில் கேட்கிறேன்! குற்றமற்ற மக்களை ஏன் கொல்கிறீர்கள் எனத் தெரிவித்தார்

'சேர்ப்' படைகள் மீது ஐநா பொதுச் செயலாளர் பட்ரஸ் பட்ரஸ்காலியு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும் விமானத்தாக்குதல்களுககு உத்தரவிடவேண்டுமென கொரஸ்டெ நகர மேயர் கேட்டுள்ளார்.

இவ் வேண்டுகோள் ஐ நா பொது செயலாளர் நேட்டோ விமானத்தாக்குதல் துரிதமாக நடைபெற்று அதன் மூலம் பதற்ற நிலைக்குள்ளாகியுள்ள 65 ஆயிரம் பிரஜைகள் காப்பாற்றப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிப்பதற்கு சற்று முன்பு கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.05.03 செவ்வாய் இரவு

08.01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08.10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற் களஞ்சிய நிகழ்ச்சி
08 20 - நலந்தானா - ''இரத்தச் சோகைக்குரிய காரணிகளும் அதற்[illegible] ஆலோசனைகளும்''
08 30 - செய்திகள்
08 40 - கருத்துக்களம் - ''பயம்''
08.50 - களமும் கானமும் ''நல்ல நேரம்''

1994 05.04 புதன் காலை

07.02 மாவீர வணக்கம்
07.15 - நீங்கள்கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை,

# உணவுமுத்திரை திட்டம் நிறுத்தப்படமாட்டாது

தற்போது வழங்கும் உணவுமுத்திரைத் திட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் எந்தக் காரணம் கொண்டும் உணவுமுத்திரைத் திட்டம் நிறுத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இதே வேளை உணவுமுத்திரைத்திட்டத்தில்நிவாரணம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படஇருப்பதாகவும்இதற்கு வருமான எல்லையை மேலும் உயர்த்துமாறும் அதிகாரிகளுக்கு உடனடியான பணிப்புரை வழங்கியும் உள்ளார்.

## மீனவருக்கு ஓய்வூதியம் வழங்க திட்டம்

(அலுவலக நிருபர்)

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் யாழ். மாவட்டத்தில் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

சிறிலங்காஅரசு கடந்த வருடம் முதல் தென்பகுதி மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள மீனவர்மத்தியில் இவ் ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென யாழ் மாவட்ட மீன்பிடிக் கூட்டுத்தாபனத் தலைவர் கொழும்பு சென்றுள்ளார்.

இதே வேளை இவ் ஓய்வூதியத் திட்டம் பற்றிய நடைமுறைகள் பற்றி ஆராயவும் அதற்கான பயிற்சியைப் பெறவும் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது

யாழ் மாவட்டத்தில் 20 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் இருப்பதாகவும் இத் திட்டம் அமுலாகும் பட்சத்தில் இவர்களது எதிர்காலத்திற்கு அது நல்ல பயனுடையதாக அமையும் எனவும் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (ச,சி)

## எண்ணப்பட்ட வாக்குகளில் மண்டேலா முன்னணி

தென் ஆபிரிக்காவில் நடந்து முடிந்த தேர்தலில் மூன்றிலொரு பகுதி வாக்குகள் மட்டுமே இதுவரை எண்ணப்பட்டிருப்பதாகவும் இவற்றில் 59 சதவீத வாக்குகளைப் பெற்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் முன்னிலையில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதிபர் எப். டபிள்யூ. டி. கிளார்க்கின் தேசிய கட்சிக்கு 26 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்திருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

### தமிழகத்தில்

வருடம் ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் திரும்பி வந்தவர். இவர் கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் திகதி மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குருநகரைச் சேர்ந்த இவரின் மரணம் குறித்தும் ஐ நா உயர் ஸ்தானிகராலயம் இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் யாழ். கிளை ஜெனிவா தலைமையகத்திற்கு இத் தகவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

தமிழ்நாட்டு அகதி முகாம்களில் உள்ள அகதி மக்களை தமிழ்நாடு முதலமைச்சர் வலிந்து அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்பதை ஜெனி

# மட்டக்களப்பு கிராமங்கள் அதிரடிப்படையால் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிராமங்களை சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து அங்குள்ள மக்களைத் துன்புறுத்துவதுடன் கைது செய்தும் வருகின்றனர்- கிராமங்கள் பகுதி பகுதியாகச் சுற்றிவளைக்கப்பட்டு மக்கள்கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்-

கடந்த 18-ம் திகதி அன்று பிற்பகல் 2-00 மணியளவில் வீட்டுத் தேவைக்கு உணவுப் பொருள்கள் எடுத்துவந்த ஒரு பொதுமகனை மண்முனை விசேட அதிரடிப் படையினர் கூடுதலாக உணவுப் பொருள்களை எடுத்துவந்தார் எனக் கூறி தாக்கிவிட்டு விடுதலை செய்தனர்- இரண்டு பிள்ளைகளின் தந்தையாகிய வேலுப்பிள்ளை ராஜா (வயது 32 மகிழடித்தீவு கொக்கட்டிச் சோலை) என்னும் இவர் பின்னர் நஞ்சருந்தி மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்-

மேலும் கடந்த 25 ஆம் 26ம் திகதிகளில் புதுக்குடியிருப்பு கிராமம் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் பகுதி பகுதியாக சுற்றி வளைக்கப்பட்டு 75க்கு மேற்பட்ட பொது மக்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்- பின்னர் அடையாள அட்டை பரிசீலிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்-

கடந்த 27-ம் திகதி மதியம் 12 மணியளவில் கொக்கட்டிச் சோலை கிராமம் விசேட அதிரடிப் படையினர் அக்கிராமத்திலுள்ள பொது மக்களை அழைத்துச் சென்று தாங்கள் ஊருக்குள் வந்தால் எவரும் ஓடக்கூடாது எனவும் ஓடினால் சுடப்படுவார்கள் என்றும் அச்சுறுத்திய பின் விடுவிக்கப்பட்டனர்-

மேலும் ஆரையம்பதி முதலாம் குறிச்சி செல்வநகர் ஆகிய பகுதிகள் கடந்த 28ம் திகதி விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பொது மக்கள் அனைவரும் ஓரிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின்பின் விடுவிக்கப்பட்டனர்-

## ஒட்டப்பந்தய விபத்தில் மோட்டார் வீரர் பலி

இமோனாவில் நேற்று நடைபெற்ற மோட்டார் ஓட்டப் பந்தயம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் மூன்று தடவைகள் உலக சம்பியன் பட்டத்தைப் பெற்ற அயற்றொம் செனா என்பவர் கொல்லப்பட்டார்-

இவர் மோட்டார் பந்தய வரலாற்றில் சாதனை படைத்தவர் ஆவார்- ஒரே பருவகாலத்தில் 8 போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் 1988இல் முதல் தடவையாக உலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார்-

41 பந்தயங்களில் இவர் வெற்றி பெற்றுள்ளார் நேற்றைய போட்டியில் இவரின் பந்தயக் கார் மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருக்கையில் இந்த விபத்து நேர்ந்தது- ஓட்டப் பந்தயப் பாதைக்கு அருகிலிருந்த சுவரில் இவரது மோட்டார் கார் மோதியதனால் வலது பக்க சில்லுகள் இரண்டும் கழன்று பறந்தன 34 வயதுடைய இவர் ஹெலிகொப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்-

## பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு முற்படுவோம்

### மேதின கூட்டத்தில் சந்திரிக்கா

(கொழும்பு)

நாட்டின் இன்றுள்ள இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வே நாம் காண முற்படுவோம் என மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

மேதின கூட்டத்தில் இக் கருத்தை இவர் தெரிவித்தார். மக்களுடன் அநேக விடயங்களை பேசுவதற்கு முயற்சி செய்ததாகவும் ஆனால் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் அணி கூட்டத்திற்கு வந்துசேர்ந்த வண்ணம் இருந்ததாகவும் இவ் மக்கள் அலையைக் கண்டதும் ஒன்றும் செய்யமுடியாமல் தான் திணறிவிட்டதாகவும் தெரிவித்தார்.

பேச்சாளருக்கு வழங்கப்

### நெதர்லாந்து

பதாகவும், கொழும்பிலுள்ள டச்சு அரசின் தூதுவருக்கு இதுபற்றி பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு, அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் டச்சு அரசு மேலும் கூறியுள்ளது.

### ஐந்து

னம் ஒன்று ரயிலுடன்

### இலங்கைத்

தை அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே அரசின் கொள்கை என்றும், இது தொடர்பாக மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டிருப்பதாகவும் பிரதமரை நேரில் சந்தித்தபோது இது பற்றிக் குறிப்பிட்டுப் பேசப்பட்டதாகவும் தெரிவித்தார் தமிழக அரசின் இக் கோரிக்கையை மத்திய அரசு விரைவில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

### எதிரணியின்

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்று பொதுசன ஐக்கிய முன்னணியே ஆட்சி அமைக்கும் என்றும் இது தவிர்க்க முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவ் அமைச்சர் தெரிவிக்கையில் மக்கள் சேவைக்காக அம்முன்னணி தலைவர்கள் தம்மை அர்ப்பணம் செய்துள்ளதாகவும், இதனாலே மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ள

### லஞ்ச ஊழல்

மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சில முக்கிய புள்ளிகள்மீது நடவடிக்கை மேற்கொண்ட காரணத்தினால் லஞ்ச ஆணையாளர் தனது பதவியை விட்டு வெளியேற்றப்பட்டார். சில அரச சார்பு முக்கியஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுத்ததற்காக தனக்குரிய பதவி உயர்வு மறுக்கப்பட்டதாக உதவி லஞ்ச ஆணையாளர் ஹெட்டி ஆராச்சி மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கம் லஞ்சத்திற்கும் ஊழலுக்கும் ஆதரவாகச் செயல்படுவதாக மக்கள் மத்தியில் எழுந்துள்ள அபிப்பிராயத்தை மாற்றவே அரசு இவ் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# சமஷ்டி அரசியலமைப்பு இந்தியாவிற்கு தேவை

## புதிய சீக்கிய அமைப்பு கோரிக்கை

(டில்லி)

இந்தியாவின் ஒவ்வொரு சமய மற்றும் சமூக மக்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்டதொரு நாடாக இந்தியா மாற்றப்பட வேண்டும்- இவ்வாறு பல்வேறு சீக்கிய அமைப்புக்கள் இணைந்து உருவாக்கிய புதிய கட்சியான அகாலி தளம் கசி கோரிக்கை விடுத்துள்ளது-

அக் கட்சி கடந்த ஞாயிறன்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தமது இந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படாதுவிட்டால் பஞ்சாப் மாநிலம் பிரிந்து செல்வதே இறுதி நோக்கமாக கொள்ளப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது-

### ஐ. தே, க. புதிய

பிபி. சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தன்னிடம் இப்பதவி வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்ட அவர், தன்னால் இயன்றளவு சரிவரக் கடமை புரியப்போவதாக உறுதி அளித்தார்.

தனது முதல் வேலையாக ஐக்கிய தேசிய கட்சியில் தற்பொழுது தோன்றியுள்ள குழு மோதலை ஒழிப்பதாகவும் கட்சி ஒரு சீரான அமைப்பின் கீழ் கொண்டுவரப்படுவதாகவும் பின்னர் கட்சியை எதிர்வரும் தேர்தலில் வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்லப்போவதாகவும் அவர் உறுதி அளித்துள்ளார்

## அணுஆயுத ஏவுகணை உற்பத்தி

# அமெரிக்க நிர்ப்பந்தத்திற்கு இந்தியா பணியாது

(டில்லி)

அணுஆயுத ஏவுகணை விடயத்தில் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு இந்தியா பணியாது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுக்ளா இந்த திட்டவட்டமன அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அமெரிக்கா செல்வதையொட்டி, லண்டனில் இந்திய அமெரிக்க அதிகாரிகளிடையே நடைபெற்ற பேச்சுக்கள்குறித்தும் மத்திய அரசு விளக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரியதை அடுத்து அமைச்சர் இவ் அறிவிப்பை வெளியிட்டார்

# வெளிநாட்டவர் மீது தாக்கு; ஜேர்மனியில் அதிகரிப்பு

(பொன்)

ஜேர்மனியின் மேற்குப்புற நகரமான பியலே பில்டில் துருக்கிய அகதிகள் தங்கியிருந்த இரு மாடிக் கட்டடமொன்றிற்கு தீ வைக்கப்பட்டுள்ளது பதின்மூன்று பேர்

பிடத்தக்கது! ஜேர்மனியில் நவநாசிகள் மீண்டும் தலையெடுத்து வருவதுடன் வெளிநாட்டவர் மீதான தாக்குதல் சம்பவங்களும் அதிகரித்து வருவது தெரிந்ததே

இதேவேளை நவநாசிகள் மற்றும் மொட்டைத் தலையர்கள் எனக் கூறப்படும் 17 வயதுக்கு உட்பட்ட இனவெறியர்களான இளைஞர்கள் பலரை ஜேர்மன் பொலிசார் இச்சம்பவங்கள் தொடர்பாக கைது செய்துள்ளனர்

தமிழ்நாடு முதலமைச்சர் வலிந்துஅனுப்புவதை நிறுத்த வேண்டும் என்பதை ஜெனிவாவில் உள்ள ஐ நா. தூதுவராலயம் இந்திய மத்திய அரசுக்கு விடுத்த கோரிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரியவருகிறது. (தி) (பா)

### ஐந்து

னம் ஒன்று ரயிலுடன் மோதிய சம்பவத்தில் ஐந்து பாடசாலை மாணவர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

### பிரிட்டனில்

இதற்கு முன்னர் ஒரு தடவை இவர் விசாவுக்கு விண்ணப்பித்த போதும் அது தமது நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைய விண்ணப்பிக்கப்படவில்லை என பிரிட்டன் தூதுவராலயம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

யாமல் தான் தண்டிட்டதாகவும் தெரிவித்தார்.


பேச்சாளருக்கு வழங்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டதாகவும் எனவே ஏனைய பேச்சாளருக்கு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு தனது பேச்சை சுருக்கிக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

### ஐ. தே. க.

தலாம் என அஞ்சியே இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் என அவதானிகள் கருதுகின்றார்கள்

# 2-வது பிறந்தநாள் வாழ்த்து

## 3 - 05 - 94



## செல்வன் அன்ரனி டிவாகர்

சந்திரகுமார் - விஜயா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் அன்ரனி டிவாகர் 2-வது பிறந்ததினத்தை இன்று கொழும்புத்துறையிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தம்பி டிஸ்மன், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

— குடும்பத்தினர்

10/1A, சென்மேரிஸ், 2-ம் ஒழுங்கை,
கொழும்புத்துறை. (8185)

ணம் செய்துள்ளதாகவும், இதனாலே மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒத்துழைப்பு வழங்கதான் எப்போதும் தயாராக இருப்பதாகவும், நாட்டு நன்மைக்காக தான் இம் முடிவை எடுத்துள்ளாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

### எயிட்ஸ்

இவ் எச்சரிக்கையை விடுத்தார்- தடுப்பூசியை விருத்தி செய்பவர்கள் அதற்கேற்ற அளவுவிஞ்ஞானம் அபிவிருத்தி அடையவில்லை எனவும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் மிகவும் சிக்கலானவை என்றும் கூறுகின்றனர்- எனினும் எயிட்ஸ் நோய் மிக மோசமாகப் பரவியுள்ள நாடுகளில் தடுப்பூசி உடனடியாக கண்டு பிடிக்கப்படவேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருக்கிறது: வளர்முக நாடுகளில் பயன்படுத்தக்கூடிய தடுப்பூசி ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அதற்குப் பெருமளவு முயற்சி தேவையென அவர் கூறுகிறார்: தடுப்பூசி ஒன்றைத் தயாரிப்பதில் சில துறைகளில் பெருமளவு ஆர்வம் காணப்பட்ட போதிலும் மற்றும் சில துறைகள் தயக்கம் காட்டுகின்றன: இந்தப் போக்கில் மாற்றம் அவசியம் என அவர் வலியுறுத்தினார் இதுவரை ஒரு கோடி 40 லட்சம் வயது வந்தவர்களுக்கும் 10 லட்சம் சிறுவர்களுக்கும் எயிட்ஸ் நோய் தொற்றியிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபன மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. எச். ஐ. வி. வைரசுக்கு எதிரான தடுப்பூசியை விருத்திசெய்வதற்காக அரசாங்கம், தனியார்துறை, கைத்தொழில்துறை, நிதித்துறை என்பவற்றுக்கு இடையேயும் செல்வந்த நாடுகளுக்கும்வறிய நாடுகளுக்கும் இடையேயும் ஒத்துழைப்பு அவசியம் என உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது

மொன்றிற்கு தீ வைக்கப்பட்டுள்ளது பதின்மூன்று பேர் இக்கட்டடத்தில் தங்கிருந்த போதும் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர் எனினும்சட்டடம்பெரும் சேதம் அடைந்தது இதே பேல சக்சோளியில் தயேசா என்னும் இடத்தில் வியட்நமிய அகதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட 200 அகதிகளின் குடியிருப்புக்களும் எரிகுண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன

இச் சம்பவங்கள் ஜேர்மனியின் நாசித் தலைவரான அடால்ப் ஹிட்லரின்பிறந்த தினமான கடந்தமாதம் ஆறாம் திகதியன்று இடம்பெற்றவை என்பது குறிப்

### எதிரணிப்

ஆரம்பமானபோது இவ் ஊர்வலம் பொறளை கம்பல் மைதானங்திற்குஇரவு 11 00 மணிக்கு வந்து சேர்ந்ததாகவும் இவ்வேளை தெருவிளக்குகள் அணைக்கப்பட்டு இருந்ததாகவும்அவர் மேலும் தெரிவித்தார்

இவ் இருள் வேளையில் தலைவர்களுக்குஆபத்து வரும் என அஞ்சி பொது மக்கள் தலைவர்களுக்கு வலயம் போன்று பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ததாகவும்இம் மக்கள் வெள்ளத்தைக்காண சகிக்காதவர்களே இதனை செய்ததாகவும் அவர் தெரிவித்தார்-

யாழ். ஸ்ரீதரில்...
தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4, 6 மணி
காற்றுவெளி
சனி, ஞாயிறு 2.30 மணிக்கு
ஒளிவீச்சு
(சி-9290)

இதேவேளை நவநசிகள் கைது செய்துள்ளனர்

# சமாதான யோசனை இஸ்ரேலசல் ஆராய்வு

அமெரிக்க வெளிநாட்ட மைச்சர் வாரன் கிறிஸ்தோபர் சிரியாவிலிருந்து கொண்டு வந்துள்ள சமாதான யோசனைகளை இஸ்ரேல் பெரும் ஆர்வத்துடன் செவி மடுத்து வருவதாக இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸ் கூறியுள்ளார்.

சிரிய ஜனாதிபதி ஹாபித் அல்அசாத்துடன் இருதடவை பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் தற்போது இஸ்ரேல் வந்திருக்கும் வாரன் கிறிஸ்தோபர் இஸ்ரேலிய அதிபர் யிட்சாக் றபினுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

# நான்கு மாதங்களில் 32 மீனவர் படுகொலை

வடபகுதியில் கடந்த நான்கு மாதகளில் மட்டும் 32 மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது அத்துடன் மீனவர்களுக்கு சொந்தமான பல வலைகள் வள்ளங்கள் என்பனவும் படையினரால் அழிக்கப்பட்டு உள்ளன

இதேவேளை கிழக்குக் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் கடல்வலயத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதில் சிறிலங்காப் படையினர் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே பாகுபாடு காட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது கல்குடா, வலைவாடி, மாங்கேணி பகுதியில் குடியேறிய சிங்கள மீனவர்களுக்கு நடுக்கடல்வரை சென்று மீன்பிடிக்க அனுமதியும் பாதுகாப்பும் வழங்கும் படையினர் தமிழ் மீனவர்களுக்கு இத்தகைய வசதி எதையும் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# வங்காளவிரிகுடாவில் புயல் மையம் கொண்டது

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டுள்ள புயல் சின்னம் மணிக்கு 210 கிலோமீற்றர் வேகத்தில் பங்களா தேசத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்தப் புயல் பங்களா தேச கரையை கடக்கும் போது ஆறு மீற்றருக்கும் அதிகமான உயரத்திற்கு அலை எழும்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.